பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 05 செவ்வாய்க்கிழமை (18.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 113

## அமெரிக்காவின் இராணுவ உதவி நிறுத்தம்

# பிள்ளையான் குழு - அரசு உறவே

# முழுக் காரணம் என்கிறார் ரணில்

## தமது பதவிக் காலத்தில் தாராளமாகக் கிடைத்ததாம்



கொழும்பு,மார்ச்18

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு பிள்ளையான் குழுவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அரசியல் நடத்துவது, சிறுவர்களைப் பலவந்தமாகப் படைக்குச் சேர்க்கும் பிள்ளையான் குழுவின் நடவடிக்கைகளுக்கு அரசு ஆதரவு வழங்குவது என்பனவே இது நாள்வரை இலங்கைக்குத் தான் வழங்கிவந்த நிதி மற்றும் இராணுவ உதவிகளை அமெரிக்கா நிறுத்தியுள்ளமைக்கு முழுக் காரணம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், சிறுவர்கள் பலவந்தமாகப் படைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் நடவடிக்கைக் கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அரசு உடன்பட்டால் மாத்திரமே அமெரிக்கா நிறுத்திய இவ்வுதவிகளை மீண்டும் வழங்க முன்வரும். - என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள தமது அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியபோதே இதனைத் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க. அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு பிள்ளையான் குழுவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு - அக்குழுவுடன் இணைந்து மட்டு. உள்ளூராட்சி சபைத் தோதலில் போட்டியிட்டதன் காரணமாக இந்த அரசு எப்படிப்பட்ட அரசியலை நடத்துகின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

கிழக்கைப் புலிகளிடமிருந்து மீட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

கொழும்பு, மார்ச் 18

வவுனியா, நாவற்குளம் பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தங்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முயன்ற நபர்களையே தாங்கள் சுட்டுக்கொன்றனர் எனப் படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

தொடர்ந்தும் அப்பகுதியில் இராணுவத்தினர் தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. (சி)

## மன்னாரில் ஷெல் தாக்குதல்

மன்னார்,மார்ச்18

மன்னார் மாவட்டம், தள்ளாடி, சௌத்பார் மற்றும் தங்காலையிலுள்ள தோமஸ்புரி ஆகிய படை முகாம்களிலிருந்து, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மாந்தை மேற்குப் பிரதேசத்தை நோக்கி நேற்று அதிகாலை முதல் கொட்டும் கடும் மழைக்கும் மத்தியிலும் இராணுவத்தினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கிலும் மன்னாரிலும் பெருமழை, வெள்ளம்: 10,000 இற்கும் அதிக குடும்பங்கள் இடம்பெயர்வு

கொழும்பு,மார்ச்18

கடந்த ஒரு வாரகாலமாக தொடர்ந்து பெய்து வரும் பெருமழை காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டங்களில் தாழ்ந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

மேற்படி நான்கு மாவட்டங்களிலும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்திருக்கலாம் என்று முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மன்னார்

மன்னார் மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலான அதாவது 6,300 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

மன்னார் நகர் உள்ளிட்ட தாழ்ந்த பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஆலயங்கள், பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களுக்கு மூன்று நாள்களுக்கு சமைத்து உணவு வழங்க செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

மழை தொடர்ந்து பெய்தால் மேலும் பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெயர நேரிடும் என்று செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சிவில், அரசியல் உரிமைப் பட்டயம்: உயர்நீதிமன்றில் 5 நீதியரசர்கள் ஆயம் ஆய்வு

கொழும்பு,மார்ச் 18

சர்வதேச சிவில், அரசியல் உரிமைப் பட்டயத்தை இலங்கை ஏற்பது இலங்கையின் அரசமைப்பு மற்றும் ஏனைய சட்டங்களுக்கு முரணானதா என்பது குறித்து ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் நேற்று ஆராய்ந்தது.

மேற்படி விடயம் குறித்து ஆராய்ந்து ஆலோசனை தருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அரசமைப்பில் உயர் நீதிமன்றுக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனை நியாதிக்கத்தின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குளங்கள், கிணறுகள் நிரம்பி வழிகின்றன

# 20 வருடங்களில் இம்முறையே மார்ச்சில் அதிக மழைவீழ்ச்சி

### குடாநாட்டில் மேலும் இரண்டொரு தினங்கள் தொடரலாம்.

யாழ்ப்பாணம்,மார்ச்18

கடந்த 20 வருடங்களில் இந்த வருடம் முன்னைய ஆண்டுகளை விட மார்ச் மாதத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 15 நாள்களில் கிடைத்த மழைவீழ்ச்சி அதி உச்சமானது என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

20 வருடங்களாக மார்ச் மாதங்களில் மிகவும் குறைந்த அளவு மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது. இவ்வருடம் மிகவும் அதிகரித்து ஆகக்கூடிய அளவில் பதிவாகியுள்ளதாக அவதான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த இரண்டு வாரங்களில் நேற்றுக் காலை 8.30 மணிவரை 127.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் திசநாயகம் அடிப்படை உரிமை மீறல் மனு!

### சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டாராம்

கொழும்பு,மார்ச்18

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் ஜே.திசநாயகம் சார்பில் நேற்று உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

குற்றப் புலனாய்வுப்பிரிவின் கொழும்பு நிலையப் பொறுப்பதிகாரி பிரசன்ன அல்விஸ், குற்றப் புலனாய்வுப் பிரிவு இயக்குநர் நந்தன முனசிங்க, பயங்கரவாதத் தடுப்பு நிலையப் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புப் படைகள் குவிக்கப்பட்ட நிலையில்

# ரூபவாஹினியின் ஊழியர்களுக்கு நேற்றுத் திடீரெனக் கதவடைப்பு!

### தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருடன் ஒளிபரப்பு

கொழும்பு,மார்ச் 18

இலங்கை அரச தொலைக்காட்சி ஊடகமான 'ரூபவாஹினி' ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று அதிகாலை திடீரெனப் படையினர் மற்றும் பொலிஸாரின் உயர் பாதுகாப்புக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அரசுத் தரப்புக்கு நெருக்கமான - தேர்ந்தெடுக்கப்பட்ட - ஒரு சில ஊழியர்களைத் தவிர ஏனையோர் கூட்டுத்தாபனத்திற்குச் செல்ல நேற்று அனுமதிக்கப்படவில்லை. அப்பணியாளர்களுக்குக் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரூபவாஹினி ஊழியர்களுக்கு எதிராக அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மா தட்டுப்பாடு ஓரிரு தினங்களில் நீங்கும்

### அரச அதிபர் சொல்கிறார்

யாழ்ப்பாணம்,மார்ச்18


குடாநாட்டில் கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அரச அதிபர் கே.கணேஷ் நேற்றுத் தெரிவித்தார்.

இப்போது திருகோணமலையில் கப்பலில் கோதுமை மா ஏற்றப்பட்டு வருகின்றது என்றும் ஒரிருதினங்களில் கப்பல் வந்து சேரும் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இப்போது, கையிருப்பில் உள்ள கோதுமை மா பேக்கறிகளுக்கு நேற்று பங்கீட்டுக்கு வழங்கப்பட்டது என்றும் -

கையிருப்பில் உள்ள கோதுமை மாவை

(12ஆம் பக்கம் பார்க்க)



தொடர்ந்து பெய்துவரும் மழையினால் பருத்தித்துறை நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதைப் படததில காணலாம். (218)

## இளங்கலைஞர் மன்றத்தில் நான்கு தினங்கள் இசைவிழா

யாழ்ப்பாணம்,மார்ச்18

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் நான்கு தினங்கள் மன்றக் கலா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

முதல் இருதினங்கள் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரையும் கடைசி இருதினங்களும் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இசையரங்கு, மங்கள இசை, நாட்டியாஞ்சலி இசைக்கச்சேரி என்பன விழாவில் இடம்பெறும். (1)

## வடமராட்சியில் சட்டவிரோத மணல் கடத்தல்; இரு வாகனச் சாரதிகளுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்18

அனுமதியின்றி சட்டவிரோதமாக மணல் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் 'ஹன்ரர்' மற்றும் லொறி வாகனச் சாரதிகளை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசத்திலுள்ள கற்கோவளம், வராத்துப்பளை கடற்கரைப் பிரதேசங்களில் அனுமதியின்றி சட்டவிரோதமாக மணலை ஏற்றிக் கொண்டு சென்ற இவ்வாகனச் சாரதிகள் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

புலோலியைச் சேர்ந்த இராசேந்திரன் ஜெகதீசன் என்ற 'ஹன்ரர்' வாகனச் சாரதி பருத்தித் துறைப் பொலிஸாரினாலும், புத்துரைச் சேர்ந்த சிவராஜசிங்கம் ஜீவிதன் என்ற லொறிச் சாரதி நெல்லியடிப் பொலிஸாரினாலும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி இரு வாகனச் சாரதிகளையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். மணலுடன் அகப்பட்ட ஹன்ரர் வாகனமும், லொறியும் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

கற்கோவளம் வராத்துப்பளை கடற் பிரதேசங்களிலும், இக்கிராமங்களில் உள்ள தனியார் காணிகளிலிருந்தும் சட்ட விரோதமாக மணல் கடத்தப்பட்டு வருவதனல் இக்கிராமங்கள் கடலில் முழ் கும் பேரபாயம் ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தும் குறிப்பிடத்தக்கது. (1-218)

## தென்மராட்சியில் ஐந்து கிராமங்களில் மீள் எழுச்சி திட்டம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்18

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் மீள் எழுச்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாய திட்ட நிறுவனத்தினர் (நியாப்), கிராம மீள் எழுச்சித் திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

மீசாலை தெற்கு, கோயிற்குடியிருப்பு, கைதடி வடக்கு, கைதடி - நாவற்குழி, கொடிகாமம் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இத்திட்டம் மேற் கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டம் தொடர்பான தகவல் சேகரிக்கும் பணிகள் பிரதேச செயலகத்தினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-1-207)

## நாட்டிலுள்ள இருபத்தைந்து மாவட்டங்களிலும் ஆண்டு இறுதிக்குள் சிங்கக்கொடி பறக்கும்

### பஸில் ராஜபக்ஷ எம்.பி. சொல்கிறார்

களுத்துறை,மார்ச்18

''நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் இந்த ஆண்டு இறுதிக்குள் சிங்கக்கொடி ஏற்றப்படுவது உறுதி. அதன் பின் சகல இன மக்களும் இன, மத, பேதமின்றி சம உரிமையுடன் வாழும் நிலை உருவாகும்.''

- இவ்வாறு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், எம்.பியுமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிராம எழுச்சித் திட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள மாவலமாரெக்ம பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது கிராம வீதிகளை கொங்றீட் மூலமாகப் புனரமைத்தல், நீர் வழங்கல், விவசாய உற்பத்தி மற்றும் சன சமூக நிலைய அடிக்கல் நாட்டும் நிகழ்வு போன்ற வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தேச நிர்மாண அமைச்சரும் களுத்துறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான ரோஹித்த அபேகுணவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பஸில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

''ஜனநாயகத்தை மதிக்கின்ற கிழக்கு மாகாண மக்களுக்காக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டியது இன்றைய தேவையாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசை பாரமெடுக்கும்போது 18 மாவட்டங்களே எஞ்சியிருந்தன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை உட்பட 8 மாவட்டங்களின் கட்டுப்பாடு புலிகளின் கைகளிலேயே இருந்தது. 2002ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் குறித்த 8 மாவட்டங்களுக்கு தென்பகுதியிலிருந்து அரச தலைவர்கள், நீதியரசர் போன்ற தரப்பினர் செல்லவேண்டுமாக இருந்தால் புலிகளின் அனுமதியைப் பெற வேண்டிய நிலை இருந்தது. அந்த நிலையை இந்த நாட்டுக்கு உருவாக்கிவிட்டவர் ரணில் விக்கிரமசிங்கவே ஆவார். ஆனால், இன்று அந்நிலை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

#### புலிகள் சமாதானப் பேச்சை தட்டிக்கழித்து வந்தனர்

எமது நாட்டிலுள்ள மக்கள் சமாதானமாக வாழவேண்டும் என்ற நோக்கில் புலிகளுடன் மூன்று தடவைகள் பேச்சுகள் நடத்தப்பட்டன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின்பேரில் நடைபெற்ற அந்தப் பேச்சுகளுக்கு புலித் தரப்பினர் இசைந்துகொடுக்காத அதே வேளை, சமாதானப் பேச்சுகளைத் தட்டிக் கழித்தனர். இதன் பின்னர் பேசிப் பயனில்லை என்ற காரணத்தினாலேயே இராணுவத் தீர்வுக்கு அரசு தள்ளப்பட்டது. ஆனால், அந்தத் தீர்வு வியக்கத்தக்க வகையில் எமக்கு திருப்தியையும் வெற்றியையும் தந்திருக்கின்றது.



புலிப் பயங்கரவாதிகளிடம் இருந்து கிழக்கு மாகாணத்தை எமது முப்படையினர் வெற்றிகரமாக மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட அந்தப் பூமியில் இன்று பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. கடந்த 10ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசு நடத்தியது. வாகரை போன்ற பகுதிகளில் 99.9 வீதமானவர்கள் தமிழர்கள். அவர்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். தமிழ் பிரதேசமொன்றில் சிங்கள வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார்.

இவற்றை வைத்துப் பார்க்கும்போது கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டதன் பின்னர் அங்குள்ள மக்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளமை தெளிவாகின்றது. (12ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்கந்தாவில் இன்று பரப்புரைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்18

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும்.

இப்பரப்புரைக் கூட்டத்தில் ஒன்பதாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களும் அனைத்து ஆசிரியர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அங்கத்துவ சங்கமான காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர்

அமரர்

**ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர்**

அவர்களது மறைவுச் செய்தி கேட்டு மிகவும் துயரமடைகின்றோம். அன்னாரை இழந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மா.கூ.சபை
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபக் கட்டடத் தொகுதி
*2ம் மாடி, இல. 12, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்*

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்

(சி/551882)

## அகவை ஐம்பதில் ஆட்டநாயகன்

மலர்வு
18 ★ 03 ★ 1958



உதிர்வு
08 ★ 02 ★ 2008

அமரர்

**இராஜநாயகம் றொகான் இராஜசிங்கம்**

றொகான்,
சாதனையான
ஓய்வறியா நின்னுடலம்
ஓய்ந்ததோ!
அரைச் சதத்துடன்
ஆட்டத்தை முடித்துக் கொண்டாய்
இன்று உன் பிறந்த நாளில்
கண்ணீருடன் நாங்கள்...

*திரு.திருமதி இராமச்சந்திரா,*
*லவ் லேன், உடுவில், சுன்னாகம்.*

மச்சாள் குடும்பம்,
சின்னன்ரி.

(72158)

## மரண அறிவித்தல்கள்

### மகேசன் மகேந்திரராஜா (இந்திரன்)



யாழ்.நீராவியடியைப் பிறப்பிடமாகவும், தென்மராட்சி கோவிலாக்கண்டியை புகுவிடமாகவும் பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட மகேசன் மகேந்திரராஜா (இந்திரன்) நேற்று (17.03.2008) திங்கட் கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேசன் - கௌரிஅம்பாளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமரையா-நல்லம்மா ஆகியோரின் மருமகனும் கமலாம்பாளின் பாசமிகு கணவரும் லக்ஷி (இசைத்துறை, 2ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம் ), நிசுதர்மன் (உயர்தரப்பிரிவு மாணவன், யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (17.03.2008) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5/1, பிரப்பங்குளம் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
கமலாம்பாள் (மனைவி)
லக்ஷி, நிசுதர்மன் (பிள்ளைகள்)
(a)

### இராமன் மார்க்கண்டு(அண்ணாவி மார்க்கண்டு)

(அச்சுவேலி ஸ்ரீ இராமானந்தா நாடக ஸ்தாபகரும் இயக்குநரும் நடிகரும்)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமன் மார்க்கண்டு(அண்ணாவி மார்க்கண்டு) 16.03.2008 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் இராமன் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னத்தின் பாசமிகுகணவரும் கணேசன் (ஜேர்மனி), டாக்டர் குழந்தைவேலு(லண்டன்), தவரத்தினம் (கொழும்பு), கிருஷாலட்சுமி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவனடியான், சின்னத்தம்பி, இலட்சுமி, சீராளம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை(19.03.2008) புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அண்ணா வீதி,*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*

தகவல்:
ரீ.சிவலிங்கம்
(பெறாமகன்)
(b)

# குறைபாடுகள் நிலவுகின்ற போதிலும் கல்வியைக் குறைவின்றித் தொடரும் கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை




பாடசாலையில் முகப்புத் தோற்றம்

கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சியும் எழுச்சியும் பாடசாலைச் சுற்றாடலில் வாழும் பிள்ளைகள், பெற்றோர்கள், பழைய மாண வர்கள் ஆகியோரின் கைகளிலேயே தங்கி யுள்ளது. வீட்டுக்குப் பக்கத்தில் பாடசாலை இருக்கக் கூடியதாகத் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுப் பும் பெற்றோர்களின் மனநிலை மாறினால் தான் கிராமப் புறப் பாடசாலைகள் வளர்ச்சிய டையும்.

நல்லூர் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை யில் கூடிய அளவில் மாணவர்க ளைச் சித்தியடையச் செய்யவேண் டும் என்பதில் ஆசிரியர்கள் அக்கறை யுடன் விஷேட வகுப்புக்கள், பயிற் சிப் பரீட்சைகளை நடத்தி வரு வதாக அதிபர் குறிப்பிட்டார்.

பாடசாலை அபிவிருத்தி சங்கம் உண்டு. எனினும் பொருளாதாரரீதியாக அதிக பங்க ளிப்பை வழங்கக் கூடிய ஆற்றலைக் கொண் டதாக அது இல்லை. பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் கடந்த பல வருடங்களாக இயங்காமல் இருந்தது.

இந்தாண்டு ஜனவரி மாதம் மீண்டும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் அய ராத முயற்சியினால் மீண்டும் அது மீளமைப் புச் செய்யப்பட்டது.

மலசலகூட வசதி இங்கு பெரும் பிரச் சினையாகவே இருக்கின்றது. ஆசிரியர்கள்,

பாடசாலை வளவின் முன் பகுதியில் மதில் கட்டப்பட்டு கதவுகள் போடப்பட்டுள்ள போதிலும், ஏனைய பக்கங்களுக்கு வேலி கள் போடப்படவில்லை. இதனால் பொது மக்கள் பாடசாலை வளவினூடாகப் போக்கு வரத்துச் செய்வதுடன் கிணற்றுக்குள்ளும் கழிவுப் பொருள்களைப் போடுவதாகக் கூறப் பட்டது. இதனால் குடிதண்ணீரை அயலில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து மாணவர்கள் பெறுகின்றார்கள்.

பாடசாலை திறந்த மண்டபத்தில் தான் நடைபெறுகின்றது. தற்போதைய நவீன கற் றல்முறைக்கு ஏற்ற முறையில் வகுப்பறை கள் காணப்படவில்லை.

மண்டபம் குறுக்கே மறைப்புகள் போடப் பட்டு வகுப்பறைகள் பிரிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பப் பாடசாலை என்ற வகையில் கற் பித்தல் சாதனங்கள் ஆக்கத்தில் ஆசிரியர்கள் கூடிய கவனம் எடுத்துள்ளார்கள் என்பதை வகுப்பறைகளில் வைக்கப்பட்டுள்ள பொருள் கள் எடுத்துக் காட்டுகின்றன.

பாடசாலையில் தரம் ஒன்றுக்கு அனுமதி பெறும் மாணவர்களில் பலர் முன்பள்ளிக்குச் செல்லாத நிலையில் வருகின்றார்கள். இதனால் பாலர் பாடசாலைக் கல்வியையும் தரம் ஒன் றுக்கான கல்வியையும் சேர்த்துப் புகட்ட வேண் டியநிலை ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றது.

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் களும் சற்று கவனம் எடுக்கவேண்டும். இந் நிலை குறைவாக உள்ளதை ஆசிரியர்கள் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

பெற்றோர் ஒருவர் இது தொடர்பாகக் கருத் துக் கூறுகையில், தற்போது பாடசாலை கற் பித்தலில் அதிக கவனம் ஆசிரியர்கள் காட்டு கிறார்கள். இதனால் பிள்ளைகள் கல்வியை ஊக்கத்துடன் கற்கிறார்கள் - என்றார்.

இப் பாடசாலையில் இருந்து விலகி வேறு பாடசாலையில் இணைக்கப்பட்ட பிள்ளை கூட, மீண்டும் இப் பாடசாலையில் இணைக் கப்பட்டுள்ளார். தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சைக்காக மாணவர்களைத் தயார்படுத்தும் நடவடிக்கையில் ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு டன் ஈடுபடு கின்றார்கள். மாதிரிப் பரீட்சை கள் இடம் பெறு வதுடன் புத்த கங்களும் வழங் கப்பட்டுள்ளன.

பாடசாலைக்கு வைத்தியர், பொதுசுகாதார பரிசோதகர் விஜயம் செய்து மாணவர்களின்



பாடசாலையின் அதிபர் இராமநாதன் செந்தில்குமரன்

சுகாதாரத்தைக் கவனித்து நட வடிக்கைகளை மேற்கொள் கின் றார்கள். மாண வர்களின்நன்மை கருதிபாடசாலை அதிபர், ஆசிரி யர்களே மருந் துகளைவேண்டி வைத்து நாளாந் தம் மாணவர்க ளுக்கு வழங்கி வருகின்றார்கள் எனவும் பெற் றோர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்த் தினப்போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள் ஆகியவற்றிலும் மாணவர்கள் கோட்ட மட்டத்தில் கலந்துகொண்டு வரு கின்றார்கள். ஆங்கில ஆசிரியர்இல்லாமை மாண வர்களுக்குப் பெரும் குறைவாகவே உள்ளது.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் மதிய உணவு வழங்கப்படுகிறது. எனினும் மாண வர்களின் ஆரோக்கியத்துக்கு இதுபோது மானதாக இல்லை. இவ்வாண்டு தரம் ஒன்றுக்கு 6 பேர் அனுமதி பெற்றுள்ளார்கள். கடந்தாண்டு 2 மாணவர்களே அனுமதி பெற்றிருந்தனர். ஆசிரியர்கள் - பெற்றோர்களுக்கு இடையில் நல்ல உறவு பேணப்படுகின்றமையைப் பெற் றோர்களிடமிருந்து அறியமுடிகிறது.

பாடசாலையில் ஆசிரியர், மாணவர் ஆகி யோருக்கான மலசலகூட வசதி உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. அத்துடன் தளபாடப் பற்றாக்குறைவும் நிவர்த்தி செய் யப்பட வேண்டியுள்ளது.

ஆரம்பப் பாடசாலையாக இருந்தும் சிறு வர் பூங்கா காணப்படவில்லை. பிள்ளை களின் வரவு சீராக இருக்கின்றது. பிள்ளை களின் மகிழ்ச்சி கரமான கற்றலுக்கு ஏற்ற வசதி கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

பிள்ளைகளுக்கான விளையாட்டுப் போட்டி கூட கடந்த இரண்டு வருடங்கள் நடை பெறாமல் இந்தாண்டே இடம்பெற்றுள்ளது.

இப் பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் குடாநாட்டில் உள்ள வெளிநாட் டுச்சிறுவர் உரிமைகள், கல்வி தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு அவசியம்.

**- பவித்திரன் -**

## ஆசிரியர்கள், மாணவர்கள் பாவனைக்கு உதவாத நிலையில் மலசல கூடங்கள்

இந்தப் பாடசாலை மிகவும் பின் தங்கிய பாட சாலையாகக் காணப்படுகிறது.

பாடசாலையின் அதிபர் இராமநாதன் செந்தில்குமரன் பாடசாலை தொடர்பாகத் தெரிவித்ததாவது:

1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 78ஆவது வருட நிறைவில் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. பொருளா தார ரீதியாக மிகவும் பின் தங்கியுள்ள மக்கள் வாழும் ஒரு பகுதியில் இப் பாடசாலை வசதி யீனங்களுக்கு மத்தியில் இயங்கிக் கொண்டு இருக்கின்றது.

பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 5 வரை வகுப்புக்கள் காணப்படுகின்றன. 36 பிள்ளை கள் இப் பாடசாலையில் தற்போது கல்வி கற கிறார்கள். ஐந்து ஆசிரியர்கள் கற்பிக்கின்றார் கள். தற்போது அயலில் உள்ள மிகவும் வறு மையான பெற்றோர்களின் பிள்ளைகளே இங்கு கல்வி கற்று வருகின்றார்கள் - என்றார் அதிபர்.

கடந்தாண்டில் ஆறு மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றினார் கள். இதில் ஒரு மாணவர் சித்தியடைந்தார்.

மாணவர்கள் ஆகியோருக்கு உகந்ததாக இங் குள்ள மலசலகூடங்கள் இல்லை. அவை மிகவும் சேதமடைந்து பாவனைக்கு உதவாத




நிலையிலேயே உள்ளன. இதனால் மாணவர் களும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். அரச சார்பற்ற நிறுவ னங்கள் இதனைக் கவனத்தில் எடுத்து மல சலகூடம் அமைக்க உதவவேண்டும் எனப் பாடசாலைச் சமூகம் எதிர்பார்க்கின்றது.

பாடசாலை வளவில் உள்ள கிணறு கடந்த பல வருடங்களாகத் துப்பரவு செய்யப்படா மல் இருந்தது. அது தற்போது துப்பரவு செய் யப்பட்டுள்ளது. எனினும்அந்தக்கிணற்றுநீரைக் குடி தண்ணீராக அவர்கள் பாவிப்பதில்லை.




*சாவகச்சேரி இந்துக் கல்லூரி நிறுவுநர் தின நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.*

*யாழ். மார்பு நோய் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்தியக் கலாநிதி செ.யமுனாநந்தா நிறுவுநர் நினைவுரை நிகழ்த்துவதையும் யாழ்.பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள் பிரிவுத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் செ.செந்தூரன், கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை, முன்னாள் அதிபர்களான க.மகேஸ்வரன், க.கயிலைநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.* (50 - 207)



*மானிப்பாய் மகளிர் கல்லூரியில் 2008 ஆம் ஆண்டிற்கான மாணவத் தலை விகளுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.*

*அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் முன்னாள் பகுதித் தலைவர் திருமதி கௌரி சிவராஜசுந்தரம் சின்னம் சூட்டுவதையும் அருகில் கல்லூரியின் அதிபர் திருமதி சூ.ஜெயவீரசிங்கம், பிரதி அதிபர் திருமதி பா.விஜய காந்தன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.*



கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 183 புள்ளி களைப் பெற்றுச் சித்தியடைந்த கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவி செல்வி ம.துஷிதாவை இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளை அண்மையில் பாராட்டிக் கௌரவித்தது.

நெல்லியடிக்கிளை முகாமையாளர் வ.தில்லைநாதன் மாணவிக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்குகிறார். அருகில் பாடசாலை அதிபர் இ.இரா கவன், வங்கியின் நிறைவேற்று முகாமையாளர் சி.சிறிஸ்காந்தன், மாணவியின் தந்தை ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்: சுந்தா)*



மட்டுவில் கமலாசனி வித்தியாலய தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா அண் மையில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் அ.மனோறஞ்சன், வித்தியாலய உப அதிபர் க.தேவநேசன், ஆசிரியர்கள், தரம் 2 மாணவர்கள் ஆகியோருடன் விழா நாய கர்களான தரம் 1 மாணவர்களையும் படத்தில் காணலாம். (50)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் திரு. சுகிதனின் அன்பு மாமன்

**திரு.பொ.தங்கராஜா**

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலையுறுவதுடன் குடும்பத்தினரின் துயரிலும் பங்கு கொள்கிறோம்.

ஆசிரிய வட்டம்,
யா/யாழ்.மத்திய கல்லூரி.

(72154)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 16 ★ 06 ★ 1941

இறப்பு 17 ★ 02 ★ 2008

*மூத்த கலைஞர், இலக்கிய ஆர்வலர், கலைக்குரல், கலைஞான பூரணன்*

**அமரர் என்.எஸ்.ஜெயசிங்கம்**

(பொதுசனத் தொடர்பாளர், திருமறைக் கலாமன்றம்)

மாதம் ஒன்று கடந்திடினும்
மனதை விட்டகலா தூயவனே
மண்ணிலுன் நினைவுகள் மாறிடுமோ
மானிட வாழ்வு உள்ளவரை!
மாபரன் பாதம் உனதான்மா
மங்காப் புகழுடன் இணைந்திருக்க
மாண்புடன் நாளும் தொழுதிடுவோம்
மனதினில் உனை நாம் நிறுத்திடுவோம்

*உன் நினைவுடன்:*
சக மூத்த கலைஞர்கள்,
திருமறைக் கலாமன்றம்,யாழ்ப்பாணம்.

(சி/551887)

## செப்பனிடப்பட்ட அரசடி வீதி மீண்டும் சேதமடைந்துள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 18

தற்போது பெய்துவரும் மழையினால் யாழ்.கந்தர் மடம் சந்திக்கு அருகில் அரசடி வீதியில் பெரிய அளவிலான குழிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் இவ்வீதியால் போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

கடந்த வருடம் இறுதியில் பெய்த மழை யினால் இந்த வீதியின் சேதமடைந்த பகு தியில் வெள்ளம் தேங்கி நின்றதால் மக்கள் சிரமப்பட்டனர்.

அதையடுத்து கிரவல் மண்ணைக் கொண்டு வீதி சீர்செய்யப்பட்டது.

தற்போது பெய்துவரும் மழையை அடுத்து இவ்வீதி பழைய நிலைக்கு சென்றுள்ளது.

இவ் வீதியைத் தார் ஊற்றி புனரமைப்பதே சிறந்தது என்று வீதியில் பயணம் மேற்கொள்ளும் மக்கள் தெரிவித்தனர். (202-224)

## யாழ்., நல்லூர் கோட்ட மெய்வன்மைப் போட்டி ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே இன்று முதல் மூன்று தினங்கள் இடம் பெறவிருந்த மெய்வன்மைப் போட்டிகள் மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் அடுத்த மாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் இடம்பெறும் எனக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## தென்மராட்சி சாரணர் சபையின் கூட்டம்

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி-தென்மராட்சி சாரணர் மாவட்ட சாரணர் தலைவர்கள் சபைக் கூட்டம் நாளை புதன் கிழமை பி.ப 2.15 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

புதிய மாவட்ட துணையாளர் அறிமுகம், கலைக்கூறு I,II,IV ஆகிய பயிற்சிகள், அறுவர் தலைவர் பயிற்சி, 2008-2009 ஆம் ஆண்டுக்கான சாரண தலைவர், சபைச் செயலாளர், உப செயலாளர் தெரிவு போன்ற விடயங்கள் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.

இந்நிகழ்வில் மாகாண மட்ட பேடன் பவல் தினம் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுமென சபைச் செயலாளர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.


சாரணர் உதவி மாவட்ட துணையாளர்கள், மாவட்ட சாரணத் தலைவர்கள், குருளைச் சாரணர் தலைவர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (1-207)

### பாடசாலை இருப்பு கணிப்பீட்டு செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள் ஆகியோருக்கான பாடசாலைப் பொருள்களுக்கான இருப்புக்கணிப்பீடுதொடர்பான செயலமர்வு நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## 31ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 28 ★ 10 ★ 1929



இறப்பு 18 ★ 02 ★ 2008

**அமரர் அன்னப்பா இராசப்பா**

பாசத்துடன் எமை வளர்த்த அப்பாவே
அணையாத எங்கள் அன்புத் தீபமே
காலங்கள் பல கடந்தாலும்-உங்கள்
பாசமுகம் எப்படி அப்பா மறையும்
அல்லும் பகலும் எமக்காய் உழைத்த அப்பாவே
கண் இமைக்கும் நேரத்தில் எம்மை விட்டுப் பிரிந்ததும் ஏனோ.....

இந்துக் கல்லூரி ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(72157)

பருத்தித்துறை வைத்தியசாலையில்

## பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு தனி அறை ஏற்படுத்த கோரிக்கை

கட்டைவேலி, மார்ச் 18

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக பதிவாளருக்கு அறை ஒன்றினை வைத்தியசாலையில் ஒழுங்குபடுத்துமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்திய சீலன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ் வைத்தியசாலையில் பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் உடனுக்குடன் வழங்கப்படுவதில்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால், குழந்தை பிறந்து ஒரு மாத காலத்திற்குள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வடமராட்சி மேலதிக மாவட்டப் பதிவாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பதிவாளர் தனது சேவைகளை நிறைவேற்றுவதற்கு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அறை ஒன்றினை வைத்தியசாலையில் ஒழுங்குபடுத்தினால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் பெற்றோர்களுக்கும் வசதியாக இருக்கும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (202-275)

## யாழ்.இந்துவில் நாளை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்.இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை புதன் கிழமை காலை 9.45 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரை யாளர் திருமதி அனுஷியா சத்தியசீலன் பரிசில்களை வழங்குவார். (1)

## கண்ணீர் அஞ்சலி

**ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம்**

(மணியம்)

(குகன் ஸ்ரோர்ஸ், விநாயகர் ஸ்ரோர்ஸ்)



*அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும்* அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெல்லைசில்க் உரிமையாளர்களும் ஊழியர்களும்.

நெல்லியடி. (சி/551884)

## சேவை நலன் பாராட்டு



**திரு.அரியரத்தினம் வைகுந்தநாதன்**

(துன்னாலை)

(அகில இலங்கை சமாதான நீதிவான், வருமானவரி உத்தியோகத்தர், வல்வெட்டித்துறை நகரசபை)

33 வருடங்கள் அரச உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றி நேற்று (17.03.2008) இளைப்பாறிய வல்வெட்டித்துறை நகரசபை வருமானவரி உத்தியோகத்தர் திரு.ஏ. வைகுந்தநாதன் (ஜே.பி) அவர்கள் நான் செயலாளராகப் பணியாற்றியபோது என்னுடன் கடமையாற்றியவர். இவர் துடிப்புடனும், மிடுக்குடனும், சீருடையுடனும், துணிவுடனும் கடமையாற்றி மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்ற ஆயிரத்தில் ஒருவர். அவரது சேவையைப் பாராட்டி ஓய்வு காலம் சிறப்புற நீடூழி வாழ்த்துகிறேன்.

நகரசபை அலுவலகம், பருத்தித்துறை. (சி/551880)

செ. திருஞானசம்பந்தர், பிரதம முகாமை உதவியாளர்.

## கண்ணீர் அஞ்சலி

**ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம் (மணியம்)**

*(குகன் ஸ்ரோர்ஸ், விநாயகர் ஸ்ரோர்ஸ்)*



எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய யாழ்ப்பாணம் குகன் ஸ்ரோர்ஸ் பங்காளர்கள் திரு ஆ.செல்லையா, திரு ஆ.குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரட்ணம் பாமசி உரிமையாளர் திரு.விஜயரட்ணம் அவர்களின் மைத்துனருமாகிய திரு ஆ.சுப்பிரமணியம் அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!

ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்,
பருத்தித்துறை.

(சி/551835)

## சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தின் 25 ஆம் கிளை உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்18

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 25ஆம் இலக்கக் கிளை உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடிச் செல்லப்பட்டுள்ளன.

மகா சிவராத்திரி தினத்தன்று மல்லாகம் கோட்டைக்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள கிளை உடைக்கப்பட்டு பல ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கிளை ஏற்கனவே இரண்டு தடவைகள் உடைக்கப்பட்டு பூட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து சனசமூக நிலையத்தினரும் அப்பகுதி மக்களும் விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே மீளத் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சங்கக் கிளையினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (202-68)

## குடாநாட்டில் மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு இணைப்பு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 18

குடாநாட்டில் இதுவரை மின்சார வசதிகள் வழங்கப்படாத இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான முன் ஏற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'நிக்கொட்' அமைப்பின் செயற்திட்டத்தின் கீழ் இச் செயற்பாடு பிரதேச செயலர் பிரிவுகள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக முன்னெடுக்கப்படவுள்ளன.

முதற் கட்டமாகத் தற்போது பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகள் பற்றிய விவரங்கள் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

மின்சாரம் வழங்கப்படாத பகுதிகள் உரிய முறையில் இனங்காணப்படுவதைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக மின்சாரம் வழங்குவதற்கு வேண்டிய. பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-68)

## தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்திய ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளின் இறுதி வகுப்புகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெற உள்ளன.

முன்னர் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு பயிற்சியைப் பூர்த்தி செய்யாத முன்பள்ளி ஆசிரியைகள் தவறாது கலந்துகொள்ளுமாறும், பயிற்சியின் இறுதி நாளன்று சான்றிதழ் வழங்கப்படுமெனவும் கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

பயிற்சி வகுப்புகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளதால் முன்பள்ளி ஆசிரியைகள் சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள பயிற்சி ஆசிரியர் லயன் எம்.பீ.சண்முகநாதனிடம் பெயர்களைப் பதிவு செய்யுமாறும் கேட்டுள்ளார்.

அத்துடன் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்புவோரும் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறும் தெரிவித்துள்ளார். (202-207)

## தொடர்ந்து பெய்து வரும் மழையால் தென்மராட்சிக் குளங்கள் நிறைந்துள்ளன

யாழ்ப்பாணம்,மார்ச்18

தொடர்ந்து பெய்துவரும் மழையால் தென்மராட்சியிலுள்ள குளங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

வயல் நிலங்களில் பயிரிட்ட சிறு தானியப் பயிர்களான எள், உழுந்து, பயறு என்பன வயல் நிலங்களில் நீர் தேங்கியதால் அழுகிய நிலையில் அழிந்துள்ளன.

இதேவேளை, வயல் நிலங்களில் பயிரிட்ட கத்தரி, மிளகாய்க் கன்றுகள் என்பன அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

மட்டுவில் வயல் வெளிகளான முதலியார் வயல்வெளி, கிலுவில் வயல்வெளி, இல்வாரை வயல்வெளி, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் வெளி உள்ளிட்ட பல வயல் நிலங்களில் பயிரிட்ட பெருமளவு சிறுதானியப் பயிர்கள் அழியும் தறுவாய்க்கு வந்துள்ளன.

இந்த சிறு தானியங்கள், கத்தரி என்பன காய்க்கும் நிலையில் காணப்படுகின்றமையால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (202-131)

## நவாலியில் அண்மையில் புனரமைக்கப்பட்ட இரு வீதிகள் மழையினால் மீண்டும் சேதம்

நவாலி, மார்ச் 17

அண்மையில் புனரமைக்கப்பட்ட நவாலி சின்னப்பா வீதி, ஞானவைரவர் வீதி ஆகியன கடந்த ஒரு சில தினங்களாகப் பெய்த மழையை அடுத்துப் பெரும் சேதமடைந்துள்ளன. வீதிகளைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவதற்கு வசதியாக பிரதேச மக்கள் வீதிகளுக்கு மண்வெட்டிப் போடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

நீண்ட காலம் திருத்தப்படாமலிருந்த இவ் வீதிகளுக்குத் தார் போட்டு அமைத்துத் தருமாறு நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களைக் கடிதமூலம் கேட்டிருந்தனர்.

இதற்கமைய கடந்த வருடம் 'நியாப்' திட்டத்தின் கல் மற்றும் மக்கி பரவாமல் தனியாகக் குளத்துக் களிமண் பயன்படுத்தி வீதி செப்பனிடப்பட்டது.

பருவ கால மழை ஆரம்பித்ததும் இவ் வீதிகளால் வெள்ளம் ஓட முடியாமல் சேறும் சகதியுமாக போக்குவரத்துச் செய்ய முடியாமல் உள்ளது.

இதனைத் தொடர்ந்து மக்கள் ஒன்று சேர்ந்து வீதியின் அருகிலுள்ள மண்ணை வெட்டி வீதியின் இரு மருங்கிலும் பரவி வருகின்றனர். (202-100)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்18

நியூபவர் வேல்ட் மற்றும் பியூட்டி செலக்சன் நிறுவனங்கள் இணைந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் யாழ்.பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடத்திவரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:


* பிற்பகல் 3 மணி - பமிலியன்ஸ் வி.க. அணி எதிர் உடற்கல்வி வெள்ளை அணி.
* பிற்பகல் 4 மணி - பற்றீசியன் வி.க. அணி எதிர் கே.ஸி.ஸி.ஸி. வி.க. 'பி' அணி. (1)

* * *

வலி.வடக்கு,மார்ச்18

யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கத்தின் அனுசரணையுடன் சுன்னாகம் றோட்டறிக் கழகம் முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் றொகான் இராஜசிங்கம் ஞாபகார்த்த கேடயத்துக்காக நடத்திவரும் ஹொக்கி சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

* வட்டுக்கோட்டை ஓட்ல் கோல் வி.க. எதிர் யாழ்.மத்திய கல்லூரி அணி.
* யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி 'நீலம்' அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி. (1-86)




### ஒவ்வொரு அரச ஊழியரும்

# மண்ணுக்காக எதைச் செய்யவேண்டுமோ அவற்றை உளமாரச் செய்யவேண்டும்

### அரச ஊழியர்களுக்கு அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 18

அரச சேவையில் பணியாற்றும் ஒவ்வொருவரும் தமது சேவையை இறை பணியாகநினைத்துச் செயற்பட வேண்டும்.



இந்த மண்ணுக்காக நாம் எதைச் செய்ய வேண்டுமோ அப்பணியை எமது உளமார்ந்த அர்ப்பணிப்புடன் செய்யவேண்டும்.

இவ்வாறுயாழ். அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார்.

வலி.மேற்கு மத்தியஸ்தர் சபையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

**இலகுவாகப் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள**

எந்தப் பிரச்சினை என்றாலும் எமது மக்கள் நீதிமன்றத்திற்கு சென்று நேரத்தையும் பணத்தையும் வீண்விரயம் செய்யாமல், சுலபமாக இலகுவான முறையில் செலவு ஏதுமின்றி தமது பிணக்குகளை தீர்ப்பதற்காக மத்தியஸ்தர் சபை உருவாக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற ரீதியான சட்டம், நிர்வாகரீதியான சட்டம், நீதித்துறை ரீதியான கூட்டங்கள் என இருக்கின்றன. இவ்வாறான கூட்டங்களைவிட மனிதாபிமான முறையிலே, சிறு பிணக்குகளுக்கான இலகுவான இணக்கப்பாடுகளை இவ்வாறான மத்தியஸ்தர் சபைகள் தீர்த்து வைக்கின்றன.

எதற்கும் ஒளிவு மறைவற்ற நீதித்துறை இருக்கவேண்டும், மக்கள் நிர்வாகத்திலே தமது பங்களிப்பைச் செய்யவேண்டும். எந்தச் செயற்பாடும் மக்களைச் சென்றடையக் கூடியநீதி, நிர்வாக முறையாக மாறி மக்கள் பயன்பெற வழிவகுக்க வேண்டும். எங்களுடையமக்களின்முன்னேற்றம்,அபிவிருத்தி போன்றவற்றுக்கான முயற்சிகளைநாம் மேற்கொள்ள வேண்டும். நாங்கள் மற்றவர்கள் எவருக்குமே தீங்கு இழைக்கமாட்டோம்.

**நல்லதொரு சமுதாயம் உருவாக**

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். எதற்கும் ஓர் இலக்கு வேண்டும். தூரநோக்கோடு நமது பார்வையைச் செலுத்தி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

பலர் என்னிடம் வந்து ஒவ்வோர் பிரதேச செயலர் ரீதியாக நடமாடும் சேவையை நடத்தி மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்க வழிவகை செய்ய வேண்டுமென கேட்டபோது நிர்வாக சேவையில் பதவிவகிக்கும் ஒவ்வொருவரும் தமது கடமைகளைச் சரிவரச் செய்தால் நடமாடும் சேவை தேவையில்லை என அவர்களுக்குத் தெரிவித்தேன். நான் என்ன செய்தேன் என்று நானே சொல்லாமல் மற்றவர்கள் இவர் இதைச் செய்தால்தான் நாம் பயனைப் பெற்றுள்ளோம் எனக் கூற வேண்டும். எம்மைப் பற்றிநாம்பெருமைகொள்ளக்கூடாது - என்றார்.

கோட்டிலே தான் நீதிவான், ரோட்டிலே நீதிவான் அல்ல, என யாழ்.பிரபல பாடசாலை மாணவி ஒருவர் தனக்கு முன் கூறுமளவிற்கு இளம் சமுதாயத்தின் மாணவரின் நண்பண்புகள் சீரழிந்துபோகும் யுகமாக யாழ்ப்பாண மாவட்டம் மாறி வருகிறது என ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

வழக்கு விடயமாக நான் ஒரு காரில் போய்க்கொண்டிருக்கும்போது, யாழ். பிரபல பாடசாலை மாணவிகள் சமாந்தர நிலையில் மூவர் சென்று கொண்டிருந்தனர். கார்ச் சாரதி ஹார்ன் ஒலி எழுப்பியும் இவர்கள் பாதையை விட்டு ஒதுங்காமல் பயணத்தைத் தொடர்ந்தனர். சாரதி, யாழ். மாவட்ட நீதிவான் வருகிறார் எனக் கூறிய போதே மாணவிகள் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறு எமது கலாசார விழுமியங்கள் பண்பாடு, பழக்கவழக்கங்கள் இளம் சமுதாயத்தை சீரழித்து வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் இல்லாதொழிய வேண்டும். பஞ்சமாபாதகங்கள் முளையிலே கிள்ளி எறியப்பட வேண்டுமாயின் இவ்வாறான மத்தியஸ்தர் சபை மூலம் தான் தீர்க்கலாம்.

நீதி வழுவாத மன்னர்கள், அரசாட்சி செய்து, செங்கோல் ஆட்சியை நிலைநாட்டிய எமது செந்தமிழ் நாடு, பண்பாட்டிலே சீரழிந்து போகின்றது. நற்பண்புகளில் நடத்தைக் குறைவு காணப்படுகின்றது. தமிழன் என்று சொன்னால் தலை நிமிர்ந்து வாழ்ந்த காலம் மாறி தலை குனிந்து வாழவேண்டிய அவல நிலையில் நாம் உள்ளோம் - என அவர் மேலும் தெரிவித்தார். (202-29)




இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை வங்கியின் நாடளாவிய கணனி வலைப்பின்னலுடன் நேற்று முன்தினம் இணைத்துக்கொள்ளப்பட்டது. இதன் ஆரம்ப வைபவத்தில் விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம். நிகழ்வின் பிரதம விருந்தினரான வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும் வலைப்பின்னல் சேவையை ஆரம்பித்து வைக்கப்பட்டு வாடிக்கையாளர்கள் வைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்:தென்னவன்)*

# அரச பணியைத் தூக்கி எறிந்து ஞானப்பிழம்பாக மாறிய கொழும்புத்துறை யோகர் சுவாமிகள்



திரு.அம்பலவாணர் என்பவர் மாவிட்டபுரத்தில் சின்னாச்சி எனும் அம்மையாரைத் திருமணம் செய்தார். சின்னாச்சி அம்மையார் 1872ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் பதினெட்டாம் நாளாகிய புதன்கிழமையன்று காலையில் அவிட்டத் திருநாளில் அருந்தவப் புதல்வனாம் யோகர் சுவாமிகளை ஈன்றெடுத்தார். கலைபயில் பருவம் உற்றதும் கொழும்புத்துறையில் உள்ள தமிழ் பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியை அவர் பெற்றார். கொழும்புத்துறையில் தமிழ் கற்று வந்த யோகநாதரை யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்பதற்காகச் சேர்த்தார்கள். இங்ஙனம் ஆங்கிலமும் செந்தமிழும் அடைவு பெறக் கற்றதன் பின் ஓர் உத்தியோகம் பெறுவதற்குரிய பருவத்தை எய்தினார். அக்காலத்தில் இரணைமடுக் குளக்கட்டுத் திட்டத்தை ஆங்கில அரசாட்சியார் ஆரம்பித்தார்கள். இத்திட்டத்தின் வேலைகளை மேற்பார்வை செய்தவர் திரு.பிரவுண் என்னும் ஆங்கிலேயராவார். இவர் யோகநாதரை பொருள் காவலராகத் தெரிந்தெடுத்தார். அங்கு அவர் கடமையாற்றிய காலத்தில் யோகநாதருடைய பண்புகளை அவதானித்த திரு.பிரவுண் அவரைக் 'கடவுள் மனிதர்' (God Man) என அழைப்பாராம்.

### சற்குருவைச் சார்தல்

செல்லப்பர் என்னும் சீரியோர் நல்வினை வந்து கைகூட்ட உலக பந்தத்தை விட்டு ஞானியாக வாழ்ந்து வந்தார். ஞானியின் பெற்றியை யோகநாதர் ஆய்ந்து அவர் பெரியார் என்பதை உணர்ந்தார். பழைய தவம் வந்து கைகூடச் செல்லப்ப முனிவரை இடையிடையேயணுகி பெரும் பேறு பெற்றார். தம்முடைய உத்தியோகத்தையும் உதறித்தள்ளிக் குருவையடையத் துணிந்தார். செல்லப்ப முனிவரிடம் சென்றார். சீடராகிய யோகநாதரின் பக்குவம் நோக்கித் தீட்சையும் செய்தருளினார்.

### துறவு பூணல்

ஒருநாள் யோகநாதர் நல்லூருக்குச் சென்று குருதேவரைத் தரிசித்தபின் கோயிற்றேர் முட்டியின் மேற்படியில் தியானத்தமர்ந்திருந்தார். (செல்லப்ப சுவாமிகளுக்கு சீடராக மற்றொருவரும் இருந்தார். அவர் பெயர் கதிரவேலு என்பது. அந்தப் படியில் கதிரவேலுவும் தியானத்தமர்ந்திருந்தார்) இரவு பகலென்ற வேற்றுமையின்றிப் பல நாள்கள் இருவருந் தியானத்தமர்ந்திருக்க, இவர்களிருவரையும் செல்லப்ப சுவாமிகள் இடையிடையே போய்ப்பார்த்து இவர்கள் தியானத்துக்கு இடையூறு நேராவண்ணம் பாதுகாத்து வந்தார். குருவின் ஆணைப்படி நல்லூரை விட்டுக் கால்நடையிற் கதிர்காமஞ் செல்லப் புறப்பட்டுக் காடும் மலையும் கடந்து சென்று கதிர்காமத்தையடைந்தார். இதற்கிடையிற் சில திங்கள் செல்ல யோகநாதரைக் காணாத சுற்றத்தவர் செல்லப்ப சுவாமிகளிடஞ் சென்று ''நம் யோகநாதர் எங்கே'' என்று கேட்டார்கள். ''யோகநாதன் செத்தே போனான்'' என்று அவர் பதிலளித்தார். உண்மையை உணராது மடித்தார்க்குச் செய்யும் கடன்களெல்லாஞ் செய்தார்கள். பின்னர் யோகநாதர் கதிரையினின்று யாழ்ப்பாணந் திரும்பிய பின்னரே உண்மையை உணர்ந்தார்கள்.

### ஆச்சிரமம்

துறவறத்தை மேற்கொண்ட யோகநாதர் கொழும்புத்துறை சுவாமியார் வீதி கொழும்புத்துறை வீதியைச் சந்திக்கும் இடத்தில் உள்ள இலுப்பமரத்தடியில் உட்கார்ந்திருக்கும் பழக்கத்தை மேற்கொண்டார். இவ்விருட்சத்தின் அயலில் நன்னியார் என்னும் ஒருவர் ஒரு கடை வைத்திருந்தார். செல்லப்ப சுவாமிகள் அக்கடைக்குப் போவதுண்டு. சிலகாலம் சென்றபின் நன்னியார் அக்கடையை விட்டுப் போகவே அது வெற்றிடமாயிற்று. அக்குடிசையில் யோகநாதர் சென்று தவத்தில் அமர்வதை வழக்கமாகக் கொண்டார். அன்றுதொட்டு அக்குடிசை அன்பர்கள் வந்து சுவாமிகளைத் தொழும் இடமாயிற்று. அன்பர்கள் சென்று வழிபாடாற்றி வந்தார்கள். சுவாமிகளும் அவர்களுக்கு ஆசி நல்கி ஆவன உணர்ந்து கருணை பாலித்து வந்தார்கள்.

### சிவதொண்டன் இதழ் சிவதொண்டன் நிலையம்

1935ஆம் ஆண்டில் சுவாமிகளின் ஆணைப்படி சிவதொண்டன் இதழ் ஆரம்பிக்கப்பட்டது. அவ்விதழில் சுவாமிகள் அருளிய நற்சிந்தனை பாடல்கள் முதன் முதலாக வெளிவந்தன. தொடர்ந்து வெளிவந்ததோடு சுவாமிகள் ஏனைய அன்பர்களுக்குப் பாடியளித்த திருப்பாடல்களும் சேர்ந்து நற்சிந்தனை நூல் வெளியாவதற்கு ஏதுவாயிற்று. பின்னர் சிவதொண்டன் நிலையம் அமைப்பித்தார்கள். அதன் பின் மட்டக்களப்பைச் சேர்ந்த செங்கலடியிலும் மற்றொரு கிளையாகிய சிவதொண்டன் நிலையம் எழுவதாயிற்று. உயிருக்கு முன்னேற்றம் அளிக்க இவை எழுந்தன போலவே உடலுக்கு வேண்டிய உணவை விருத்தி செய்வதற்குரிய பணிகளை வற்புறுத்தித் தொடங்குவித்தார்கள். ''பஞ்சம் வரப்போகிறது விவசாயத்தை பெருமளவிற் தொடங்கி செய்யுங்கள்'' என்று தீர்க்க தரிசனத்தோடு இடித்துரைத்தருளினார்கள். செங்கலடியிலும் கிளிநொச்சியிலும் சுவாமிகள் வாங்குவித்து பயிர்ச்செய்கை செய்வித்து வரும் ஏக்கர் கணக்கான நிலங்கள் சிவத்தொண்டன் நிலைய விழாக்களுக்கு உதவி வருவதை எவரே அறியார்? இவ்வாறு அடியவர்க்கு உய்யுநெறி காட்டிய ஐயன்

### இன்று குருபூசை தினம்

வழக்கம்போல் ஒருநாள் ஆவுக்கு உணவைக் கொண்டருளும்போது கொட்டிலிற் கண்டுண்டிருந்த பசு அவாவினால் துள்ளிப்பாய சுவாமிகள் திடீரெனத் திரும்பிய போது விழுந்து பின் சில்லியங்கும் நாற்காலிகள் கொண்டுலாவி வருவாரானார்கள். தம்மிடம் வரும் அன்பர்களுக்கெல்லாம் வழிகாட்டியருளிப் பாதயாத்திரையாகி வெகுகைங்கரியம் புரிவித்தார்கள். 1964ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் ஆயிலிய நட்சத்திரத்தில் மகா சமாதியெய்தினார்கள். இவ்வாறு சமாதியெய்தியதை அறிந்த அன்பர்கள் இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்காக வந்து சுவாமிகளுக்குச் செலுத்தும் தமது இறுதியஞ்சலியைச் செலுத்தினார்கள்.

-போ.வினாசித்தம்பி.

## யோகர் சுவாமிகளின் குருபூசை இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்.18

கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதிக் கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அபிஷேகம் நடைபெறும். அதைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்18

தவத்திரு சிவயோக சுவாமிகளின் 44 ஆவது குருபூசை தினத்தை ஒட்டி இன்று காலை 9.30 மணி முதல் சிவதொண்டன் நிலையத்தில் விசேட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. விசேட பூசை, ஆராதனைகள், பஜனை, மகேஸ்வர பூஜை என்பன இடம்பெறும். (1)

* * *

வலி.வடக்கு, மார்ச்18

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் குரு பூசை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் நற்சிந்தனைப் பாடல்களும் இடம் பெறும். (202-86)

* * *

கொழும்புத்துறை,மார்ச்18

சிவயோக சுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அதிபர் சா. தியாகலிங்கம் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (202-224)

## விழிப்புலனற்றோரின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சமூக சேவைகள் அமைச்சர் ரூ.4 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு,மார்ச்18

விழிப்புலனற்றோரின் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதி, விழிப்புலனற்றோருக்கான மருத்துவ உதவிகள், அவர்களது படைப்புக்களை வெளிக்கொண்டு வருதல், சுய தொழில் முயற்சிகள், கல்வி நடவடிக்கைகளுக்கான நிவாரணங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிகள் போன்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவுள்ளன.

1993ஆம் ஆண்டு நாடாளுமன்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட விழிப்புலனற்றோர் நிதியத்திற்கு இதுகாலவரையில் எந்தவொரு அரசாங்கமும் இந்தளவிற்கு பாரியதொரு தொகையை ஒதுக்கவில்லை என்றும்- இந்த நிதியத்திலிருந்து 2008ஆம் ஆண்டு முதல் உயர் கல்வி கற்கின்ற விழிப்புலனற்ற மாணவர்களுக்கு 1500 ரூபாவை மாதாந்த தொகையாக வழங்கவும், யுத்தம் காரணமாக பார்வை இழந்தோருக்கு உதவுதல் போன்ற பல் வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (202)


## கண்ணீர் அஞ்சலி

அமரர் ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம் (மணியம்)

*(குகன் ஸ்ரோர்ஸ், விநாயகர் ஸ்ரோர்ஸ்)*



அமரத்துவமடைந்த எமது நீண்டகால உற்ற நண்பர் ஆ.சுப்பிரமணியம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(72152) உரிமையாளர்,

கதிர்வேலவன் அரிசி ஆலை, கைதடி கிழக்கு.



## அறிவித்தல்

### பருத்தித்துறையில் விமான ரிக்கெற் பதிவுகள்

யாழ்ப்பாணம் - கொழும்பு, கொழும்பு - யாழ்ப்பாணம்

செல்லும் பயணிகள் விமான ரிக்கெற் பெறுவதற்கான பதிவுகளை பருத்தித்துறையில் மேற்கொண்டு பயண ரிக்கெற்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.



''ராஜன்'' மஹாலக்ஷ்மி

*பஸ் நிலையம், பருத்தித்துறை.*

பருத்தித்துறையிலிருந்தும் கொழும்பிலிருந்தும் பயணங்களைப் மேற்கொள்வதற்கான வாகன வசதிகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேலதிக தொடர்புகள்: 021 226 3248, 021 226 4013

(சி/551879) ''மஹாலக்ஷ்மி'', பஸ்நிலையம், பருத்தித்துறை.


## மனம் மாறுவதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம்




தவக்காலம் என்பது மனமாற்றத்தின் காலம் என்றும் அருளின் காலம் என்றும் பரித்தியாகத்தின் காலம் என்றும் பலவாறாகப் பலரால் அழைக்கப்படுகின்றது. மனிதன் இறைவனைத் தேடுகின்ற தேடல் பயணத்திலே வருகின்ற ஒரு பொற்காலமாகக் கருதப்படுகின்றது. திருச்சபையினுடைய மறைபொருளை அனுபவிக்கின்ற காலமாக அமைகின்றது.

இன்று இந்த தவக்காலத்தின் பரிசுத்த வாரத்தினுள் பயணிக்கும் எமக்கு இறைவன் தருகின்ற செய்தியை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்ப்போம். இறைமகன் இயேசு தான் உருவாக்கிய தனது பன்னிரண்டு (12) சீடர்களுடன் பந்தியமர்ந்துகொள்வதை தூய யோவான் நற்செய்தியாளர் நமக்குத் தருகின்றார். இந்த இறைவார்த்தைப் பகுதியில் இயேசு இரண்டு விதமான மனிதர்களை முன்வைக்கின்றார். ஒருவர் யூதாஸ் மற்றையவர் சீமோன் பேதுரு.

மூன்று வருடகால உருவாக்கத்தின் பின்னர் அவர்களைப் பற்றிய ஆய்வினை அறிக்கையாகக் கூறுகின்றார் இயேசு. இருவருடைய குணநலன்கள் பற்றி நேருக்குநேர் எடுத்துரைக்கின்றார். முதலின் யூதாசினுடைய குணவியல்பு கூறப்படுகின்றது. யூதாஸ் அவர்களுடைய குழுவிற்குக் காசாளராக செயற்பட்டு வந்தவன். பணத்தின் மேல் பற்றும் பாசமும் கொண்டிருந்தான். இதனால் இயேசுவினுடைய உறவிலிருந்து பிரிந்துபோகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுகின்றான். இயேசுவைக் காட்டிக் கொடுக்கத் துணிகின்றான்.

இரண்டாவதாக சீமோன் பேதுருவின் குணவியல்பு ஆழமாகக் கூறப்படுகின்றது. பேதுருதான் இயேசுவைப் பின்பற்றுவதில் உறுதியாக இருக்கின்றேன் என்பதைக் காட்ட இயேசுவிடமே கேள்விக்கணைகளைத் தொடுக்கின்றார். ஆனால் அனுபவத்தின் வெளிப்பாடாக இயேசு பேதுருவைப் பார்த்து அவரது உண்மை நிலையைக் கூறிவிடுகின்றார்.

காட்டிக் கொடுத்தலும் மறுதலித்தலும் மனித வாழ்வின் அனுபவங்களாகவும் வரலாறாகவும் காணப்படுகின்றது. காட்டிக் கொடுப்பவனும் காட்டிக் கொடுக்கப்படுபவனும் உடனடிப் பலாபலனை அனுபவிக்கின்றான். மறுதலிப்பவனும் மறுதலிக்கப்படுபவனும் மாற்றங்களை எதிர்கொள்கின்றான். வாழ்க்கையில் மாற்றம், சொற்களில் மாற்றம், செயல்களில் மாற்றம்.

எம் வாழ்வில் நாம் சமூகமாக வாழுகின்றோம். எமது சமூகத்தில் பலர் எம்மோடு பயணிக்கின்றார்கள். எமது குணவியல்புகளை மற்றவர்கள் சொல்லி சுட்டிக்காட்டும்போது நாம் அவற்றை ஏற்கத் துணிகின்றோமா? என்று கேட்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏற்று அவற்றை மாற்றியமைத்தால் நாம் சீரிய வாழ்வை வாழ்வதற்கு வழி கிடைக்கின்றது. நமது வாழ்வை திசை திருப்பினால் வாழ்வு மலரும். ஏற்க மறுத்து இறுமாப்புடன் வாழ்ந்தால் நாம் காட்டிக் கொடுப்பவர்களாகவே இருந்துகொண்டிருப்போம். எனவே இன்றைய நாள் எமக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தை தருகின்றது மனம் மாறுவதற்கு. நாம் தயாரா?

*அருட்.சகோ.அ.விமலநாதன் (அ.ம.தி.)*

# நாம் போராட்டத்தில் வெல்லாவிடில் தமிழினம் அழியும்; 1923 இல் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுவிட்டது

கிளிநொச்சி, மார்ச் 18

தமிழீழத்தை மீட்டு எடுக்கவேண்டிய வரலாற்றுக் கடமையில் நாங்கள் தவறிழைத்திருக்கின்றோம். இந்த விடுதலைப் போராட்டத்தில் நாம் வெல்லாவிட்டால் தமிழினம் அழியும். இங்குமட்டுமல்ல உலகம் முழுவதும் வாழுகின்ற தமிழினம் கட்டாயம் அழியும்.

இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறாவிட்டால் உலகத்தில் தமிழினம் என்ற இனம் ஒன்று இருந்தது என்பதை வரலாறுதான் சொல்லும். நாங்கள் எப்படி வாழ்ந்தோம் என்பதை தொல்பொருள் சான்றின் ஊடாகத்தான் இப்போது பார்க்க வேண்டியிருக்கிறது.

இவ்வாறு தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ. வ. தமிழேந்தி தெரிவித்தார்.

அன்புச் செல்வன் எழுதிய 'தமிழீழ எல்லைகள் நோக்கி நகர்வோம்' நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்துகையிலேயே தமிழேந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தமது நீண்ட உரையில் தெரிவித்ததாவது:

ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தால் செய்யும் என்பது தமிழ்மறை. தமிழர்களைப் பொறுத்தவரை மிகச் சிறந்த வாழ்வியல் நூலை நாங்கள் பெற்றிருக்கின்றோம். திருக்குறளை ஓர் அற நூலாகக் கருதுவோர் உண்டு.

உண்மையிலே அது ஒரு வாழ்வியல் நூல். அங்கே அறமும் மறமும் பேசப்படுகின்றன. ஆயினும் தமிழர்கள் தம் முன்னோரின் கருத்துப்படி செவிமடுக்கவில்லை. அதனால் தான் இன்று நாங்கள் இந்த இழிநிலையில் இருக்கின்றோம்.

எந்தக் காலத்தில் எதனைச் செய்ய வேண்டுமோ அதனை நாங்கள் செய்யாமல் விடுத்தோம். அதனால் பெரும் அழிவிற்குள்ளாகி தமிழினம் இன்று இந்த நிலையில் இருக்கின்றது.

ஒரு காலத்தில் உலகம் முழுவதனையும் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் ஆசியாவில் பல நாடுகளையும் ஆட்சி புரிந்தவர்கள் தமிழர்கள்.

ஏறக்குறைய 70 ஆண்டுகள் இலங்கையை அவர்கள் ஆண்டனர்.

இந்தியா முழுவதும் தமிழர்களின் நாடாக இருந்தும், இன்று இந்தியாவிலும் ஒரு அடிமை இனமாக, இங்கே விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கின்ற ஒரு இனமாக, வெளிநாடுகளுக்கெல்லாம் குடிபெயர்ந்து போயிருக்கும் மக்கள் தங்களின் இன அடையாளத்தை இழந்து வாழ்கின்ற ஒரு நிலையைப் பார்க்கின்றோம். காலம்கருதி தங்கள் கடமையை எங்கள் முன்னோர் செய்யாததினால் வந்தவினை. அந்த வினையின் விளைவு தான் இன்று அன்புச் செல்வன் எழுதியிருக்கின்ற இந்த நூல்.

### வாய்ப்பினைத் தவறவிட்டோம்

எங்களின் ஈழத்து வரலாற்றை எடுத்துப் பார்ப்போமானால் எங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் நாங்கள் தவறவிட்டோம். அதனால் தான் இன்று நாங்கள் துன்பமான நிலையில் நிற்கின்றோம். ஆனால் ஒரு மகிழ்ச்சி. ஒரு மிகச்சிறந்த அதாவது முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் அடிக்கடி கூறுவார், ''தமிழர்களின் வரலாற்றுக் காலத்தில் கடந்த 2000 ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகச் சிறந்த மாவீரன் பிரபாகரன்'' என்று சொல்வார். அத்தகைய ஒருவரின் வாழ்க்கைக் காலத்தில் நாங்கள் வாழ்கின்றோம். அவருடன் சேர்ந்து நாங்கள் உழைக்கின்றோம். இனத்தின் விடுதலைக்காகப் போராடுகிறோம் என்பது எல்லாமே எங்களுக்குப் பெருமை.

### முன்னோர் செய்த தவறு

அதனை விடுத்துப் பார்த்தால் எங்கள் முன்னோர்கள் செய்த தவறுகள் எங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றது.

இலங்கை விடுதலை அடைவதற்கு முன்பே 1923 ஆம் ஆண்டு தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1917 ஆம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரசை அமைப்பதற்கு முன்னேற்பாடான ஒரு கூட்டம் நடைபெற்றது. அங்கே சில சிக்கல்கள் முன்வைக்கப்பட்டன. தமிழர்களின் இனவாரி பிரதிநிதித்துவத்தையும் சர்வஜன வாக்குரிமையையும் கோரி நின்ற நேரத்தில் சிங்களம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவர்களுக்குள் முரண்பாடு வந்தது. இலங்கை தேசிய காங்கிரஸ் அமைப்பதில் சிக்கல் வந்தது. அந்த நேரத்தில் 1918 ஆம் ஆண்டு சிங்களத் தலைவர்கள் கொடுத்த பொய்யான வாக்குறுதிகளை நம்பி 1919 ஆம் ஆண்டு இலங்கை காங்கிரஸ் அமைக்கப்பட்டது.

அதற்குப் பின்னால் சிங்களத் தலைவர்கள் தங்கள் வாக்குறுதியிலிருந்து பின்வாங்கிய காரணத்தால் அருணாசலம் மற்றும் தலைவர்கள் 1922 ஆம் ஆண்டு இலங்கைக் காங்கிரசிலிருந்து பிரிந்து இலங்கைத் தமிழர் மகா சபை என்ற அமைப்பை உருவாக்கினார். அதன் அடுத்த மாநாட்டில் 1923 ஆம் ஆண்டு தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தார். அவர் 1924 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இந்தியாவிற்கு சென்றவர், அங்கே இறந்து விட்டார். ஒருவேளை அவர் உயிரோடு இருந்திருந்தால் அவர் சோல்பரி அரசியல் யாப்பு வரையப்படும் காலம்வரை வாழ்ந்திருப்பதற்கு வாய்ப்பில்லை.

### வாய்ப்பு நழுவியது

ஆனாலும் அவர் சில காலம் வாழ்ந்து அந்தத் தமிழீழக் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு அமைப்பை உருவாக்கியிருந்தால் ஒரு வலுவான அமைப்பு ஒன்று இருந்திருக்கும். அந்த வாய்ப்பு நழுவ விடப்பட்டது. அருணாசலத்தோடு அது இல்லாமல் போய்விட்டது. அதற்குப் பின்னால் 1936 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் பணியாற்றியவர் பொன்னையா என்பவர் மருத்துவர். அவரும் வள்ளிபுரயான் என்ற நொத்தாரிஸ் ஒருவரும் தமிழர்களின் பகுதிக்கு தமிழ் அரசு வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எழுதினார்கள். அறிக்கை ஒன்றைக் கொடுத்தார்கள். அந்த அறிக்கையை திருத்தம் செய்து கொடுத்தவர் பின்னாளில் தமிழரசுக் கட்சித் தலைவராக இருந்த எஸ்.ஜே. வி. செல்வநாயகம். அவர் திருத்திக் கொடுத்தாரே தவிர அதில் ஒப்பமிடவில்லை. நான் இங்கே சொல்லவருவது என்னவெனில், தமிழீழம் தொடர்பாக 1944 ஆம் ஆண்டிற்குப் முன்பு இரண்டு தடவைகள் நாங்கள் அறியக் கூடிய வரலாற்றில் முன்வைத்துள்ளனர். இந்தச் செய்திகளை எல்லாம் தலைவர்கள் அறிந்திருப்பர்.



## வரலாற்றுக் கடமையில் தவறியதாலேயே இன்றைய நிலை என்கிறார் தமிழேந்தி

1944 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு எழுதப்பட்டபோது போர்த்துக்கேயரால் அடிமைப்படுத்தப்பட்ட தமிழர்களின் தேசத்தை தமிழர்களிடம் விட்டுச் செல்லுங்கள் என்று கேட்பதற்குப் பதிலாக யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத 50 இற்கு 50 கோரிக்கையை முன்வைத்தார்கள்.

அதாவது 74 வீத சிங்களவர்களும் 26 வீத ஏனைய இனமும் இருக்கின்ற ஒரு தேசத்தில் 50 விழுக்காடு நாடாளுமன்ற உறுப்புரிமை சிறுபான்மை இனங்களுக்கும் 50 விழுக்காடு சிங்களவர்களுக்கும் என்று கேட்டார்கள். அவர்கள் அதனைக் கொடுக்கவில்லை. சோல்பரி அதனை ஏற்றுக்கொள்ளவேயில்லை.

### வரலாற்றில் மற்றுமொரு தவறு

ஆக வரலாற்றில் நாங்கள் விட்ட தவறு. எங்களுக்கு முன்னால் இன்னுமொரு நிகழ்வு நடந்தது. இந்தியா விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தது. முகமது அலி ஜின்னா இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து விடுதலைக்காக அவர்கள் எல்லோரும் போராடிக் கொண்டிருக்கின்றனர். இக்பால் என்ற முஸ்லிம் கவிஞன் முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் வேண்டும் என்று கேட்டபோது அவரை முட்டாள் என்று திட்டியவர் ஜின்னா. ஆனால் பின்னாளில் காலம் கனிகின்றபோது எப்போது எதனைக் கேட்க வேண்டுமோ அப்போது அவர் பாகிஸ்தான் வேண்டும் என்று கேட்டார் அதற்காகப் போராடினார். பாகிஸ்தான் கிடைத்தது.

ஜின்னா பாகிஸ்தானைப் பிரித்து எடுத்த அந்த வரலாறு இங்கிருந்த தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியாமல் போயிருக்க எந்தக் காரணமும் இல்லை. ஆனால் நாங்கள் கண்ணை மூடிக்கொண்டிருந்தோம். தொலை நோக்கற்றவர்களாக இருந்தோம். காலத்தில் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் இருந்தோம்.

அந்த வரலாற்றுத் தவறுகள் தான் இன்று இந்த மண்ணில் 19,000 சதுரகிலோ மீற்றர் அல்லது 20,000 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் தென் தமிழீழத்தில் பெரும்பகுதி சிங்களவர்களால் பறிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது எங்கள் முன்னோர்விட்ட தவறின் காரணத்தினால் வந்தது.

இந்தத் தவறை இன்று இருக்கின்ற தலைமுறை எப்படித் திருத்திக் கொள்ளப் போகிறது? நாங்கள் எப்படி திருத்திக் கொள்ளப் போகிறோம் என்பது இந்த நூலிலே தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கை காரணமாகச் சிங்களக் குடியேற்றங்கள் கலைக்கப்பட்ட செய்தி கூறப்பட்டிருக்கின்றது. இன்று இந்தநிலை மாறி தென் தமிழீழத்தில் சிங்கள அரசுதான் எண்ணியபடி சிங்களக் குடியேற்றங்களை அமைத்துக்கொண்டு வருகின்றது.

### ஒரே அணியில் நின்றிருந்தால்

இதற்கு யார் காரணம். தமிழர்கள் எல்லோரும் முழுத் தமிழர்களும் எங்களின் தலைவரின் கைகளைப் பலப்படுத்த வேண்டும்.

எந்தவொரு இனத்தின் விடுதலைப் போராட்டத்திலும் எல்லா மக்களும் முழுமையாகப் பங்களிப்பதில்லை என்று யாராவது சொல்லக்கூடும். ஆனாலும் தேவை கருதி எங்களின் நிலைமையைப் புரிந்துகொண்டு எங்களுக்குள் பிரிந்து நின்று காட்டிக் கொடுத்து இரண்டகம் புரிந்திருக்காவிட்டால்- எல்லோரும் ஓரணியில் நின்றிருந்தால் இப்படியான நிலைமை ஏற்பட்டிருக்காது.

தமிழ் நாட்டை எடுத்துப் பார்த்தாலும் சரி இங்கே உள்ள நிலைமையை எடுத்துப் பார்த்தாலும் சரி நாங்கள் ஒவ்வொருவரும் தலைவராக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். இதனால் வந்த வினை இன்று இந்த நிலைமைகள்.

அதாவது தமிழர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் இந்தத் தவறை செய்திருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர்களைச் சிங்களவர்கள் ஏமாற்றினார்கள் என்று சொல்வது தப்பு, நாங்கள் ஏமாந்தோம்.

டொனமூர் அரசியல் யாப்பு தமிழர்கள் செய்த துரோகத்தினால் உருவானது. சோல்பரி அரசியல் யாப்பு தமிழர்கள் செய்த துரோகத்தினால் உருவானது. இரண்டுமுறை தவறு இழைத்தார்கள்.

வெள்ளையர் இருக்கும்போதும் தவறு இழைத்தார்கள். அதற்குப் பின்னாலும் தவறு இழைத்தார்கள்.

இதனால் நாங்கள் இப்போது துன்பப் படுகின்றோம். இது எல்லாம் மலேசியத் தமிழர்களுக்குத் தெரிந்திருக்காமல் இருக்க வாய்ப்பில்லை. தலைவராக இருந்தவர்கள் அந்த நேரம் மலேசியாவிலிருந்த தமிழர்கள் பிரிட்டிஷ்காரர்களின் எண்ணகக் கருத்தினைப் புரிந்துகொண்டு தங்களின் அந்தக் கருத்தின் அடிப்படையில் தங்களுக்கான தேசத்தை கேட்டிருந்தால் கண்டிப்பாகக் கொடுத்திருப்பார்கள்.

1957 ஆம் ஆண்டு மலேசியா விடுதலை அடைந்தது. விடுதலை அடைகின்றபோது மலேசியாவை மூன்றாகப் பிரித்து சீனாக்காரர்களுக்கும் தமிழர்களுக்கும் மலாயாக்காரர்களுக்கும் மூன்று நாடுகளாகப் பிரிப்பதற்குப் பிரித்தானிய அரசு திட்டமிட்டதாகவும் அந்தநேரத்தில் மலேசியாவில் இருந்த தமிழர்கள் செய்ததவறினால் அது நிகழவில்லை.

அங்கே இருந்த பெரும்பான்மை இனத் தலைவர்கள் இவர்கள் எல்லாம் டி.எஸ். சேனநாயக்க செய்ததுபோன்று நாங்கள் ஒற்றுமையாக இருந்து பிரிட்டிஷ் காரர்களிடமிருந்து விடுதலை பெற்றுவிடுவோம். அதற்குப் பின்னால் எங்களின் சிக்கல்களை எல்லாம் பேசித் தீர்த்துக் கொள்வோம் என்று சொன்னபோது இன்று இருந்த தமிழர்கள் ஏமாந்து போய்விட்டது போன்று, அன்று மலேசியாவிலிருந்த தமிழர்களும் ஏமாந்தார்கள்.

மலேசியாவில் இருக்கும் தமிழர்கள் இன்று எந்த நிலையில் இருக்கின்றார்கள் என்பதனை ஏடுகளிலிருந்து படிப்பவர்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

வரலாற்றில் நாங்கள் தவறு செய்திருக்கின்றோம். அந்தத்தவறுகள், எங்களை அடிமைப்பட்ட இனமாக்கிவிட்டது. ஒரு பெரிய இறைமை உள்ள தேசத்தின் குடிமக்களாக வாழவேண்டியவர்கள் இந்த நிலையில் இருக்கின்றோம்.

தொன்மைமிக்க நாகரிகத்தோடு பண்பாட்டோடு மிகச்சிறந்த மொழியோடு வாழ்ந்த இனம் அடிமைப்பட்டு அழிகின்ற நிலை இந்த நூற்றாண்டில் ஓர் இனத்திற்கு இருக்கின்றது என்றால் அது தமிழர்களாகத்தான் இருக்க முடியும்.

வேறு எந்த இனமும் உலகில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நாங்கள் எங்களின் பழம் பெருமைகளைப் பேசிக் கொள்கின்றோம். இனிமேல் புதுமையைப் படைப்பதற்கு இன்றைய தலைமுறை முழுமையாக முன்வர வேண்டும்.

### சிங்களவர்களுக்கு இரண்டிலும் வெற்றி

ஓர் இனத்தை அழித்துவிட வேண்டுமானால் இரண்டைச் செய்ய வேண்டும். ஒன்று அதன் மொழியை அழித்துவிட வேண்டும். மற்றது அது வாழ்கின்ற நிலப் பரப்பை பிடுங்கி விட வேண்டும்.

சிங்களவர்கள் அந்த முயற்சியில் பெருமளவு வெற்றி பெற்றிருக்கின்றார்கள். மொழியை அழிக்கும் பணியில் கூட அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று தான் நான் சொல்வேன்.

### தமிழர்களின் குழந்தைகள் தமிழ் தெரியாதவர்களாகவே இருப்பர்

எங்கள் மக்கள் தொகையில் ஏறக்குறைய அரைவாசிப் பேர் இந்த நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். அங்கே வாழக்கூடிய தமிழர்கள் இன்னும் ஒரு தலைமுறைக்கு அப்பால் தமிழ் பேசுகிறவர்களாக இருக்க மாட்டார்கள். இங்கிருந்து சென்றவர்கள் தமிழைப் பேசுகின்றனர். பெற்றோருக்குப் பேச்சு மொழி தெரியாத காரணத்தினால் தமிழ்பேசுகின்றனர். அதற்கும் அப்பால் அவர்களின் குழந்தைகள் தமிழ் தெரியாதவர்களாக இருக்கப் போகின்றனர். தமிழர்கள் தங்கள் மொழியை இழந்து அடிமைப்பட்டு வேற்றினமாக மாறி, தம்மை எந்த இனம் எனச் சொல்லிக் கொள்ளமுடியாத நிலையில் வாழ்கின்ற அவலநிலை. தமிழீழத்திலிருந்து வெளியேறிய தமிழர்களுக்கும் இதுதான் சிறிது காலத்தில் நடக்கப் போகின்றது.

அந்த வகையில் சிங்களவர்கள் தமிழர்களை அழிக்கின்ற முயற்சியில் மிகப் பெரிய வெற்றியை அடைந்திருக்கின்றனர்.

அதாவது, நீர்கொழும்பில் நாடு விடுதலையடைகின்றபோது 53 தமிழ்ப் பாடசாலைகள் இருந்தன. இன்று விஜயரட்ணம் இந்து மகா வித்தியாலயம் என்ற ஒரேயொரு தமிழ்ப் பாடசாலை மட்டுமே இருக்கின்றது.

அங்கிருந்த 53 பாடசாலைகளிலும் தமிழ் ஆசிரியர்களை நிறுத்திவிட்டு சிங்கள ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்தினார்கள். தமிழ்ப் பிள்ளைகள் கட்டாயமாக சிங்கள மொழியை படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் இன்று சிங்களவர்களாக மாறியிருக்கின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் மோசமடையும் நிலைமைகள் குறித்து ஐ.நா. துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பிரான்ஸ் தமிழர் மனித உரிமை மையம் வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 18

''மோசமடைந்துவரும் இலங்கை நிலைமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அதிக கவனம் செலுத்தி துரிதமாகச் செயற்பட முன்வர வேண்டும்.''

- இவ்வாறு பிரான்ஸ் தமிழர் மனித உரிமைகள் மையப் பொதுச் செயலாளர் ச.வி. கிருபாகரன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 7ஆவது கூட்டத் தொடரில் அவர் பேசியவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அரங்கங்களிலும் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையத்திலும் கடந்த இரு தசாப்த காலமாக இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டவைகளைக் கவனமாக வாசித்துப் பார்த்தால், ''இந்த உண்மைகள் தொடர்பில் ஏன் அனைத்துலகம் அமைதி காக்கிறது?'' என்ற கேள்வி வெளிப்படுகிறது. இலங்கை நியாயமற்ற வாதங்களை முன்வைக்கின்றபோதெல்லாம் அனைத்துலகம் மிகவும் அமைதியாக இருக்கிறது. பல சிறப்புப் பிரதிநிதிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். பல்வேறு நிறுவனங்களும் இலங்கை தொடர்பிலான உண்மை நிலைமைகளை அறிக்கைகளாக வெளியிட்டுள்ளன.

எந்த ஒரு மனித உரிமைப் பாதுகாப்பாளர்களின் படுகொலைகளிலும் முறையான விசாரணை இன்றுவரை நடத்தப்படவில்லை. இதனால், போர்நிறுத்த மீறல்களைக் கண்காணித்து வந்த நோர்டிக் நாடுகளின் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் இலங்கையிலிருந்து வெளியேறியது.

இப்போது போர் நடைபெற்றுவருகிறது. இலங்கையின் நிலைமை மிக மோசமடைந்துவருகிறது. ஆகையால் இலங்கை நிலைமைகள் குறித்து ஆராய்ந்து சாத்தியமான அனைத்துச் செயற்பாடுகளையும் ஐ.நா.சபை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

# கணனி மென்பொருள் ஆக்கப் போட்டியில் வெற்றிபெற்ற தென்மராட்சி வலயத்தினர்

யாழ்ப்பாணம்,மார்ச்18

மாகாண மட்ட கணணி மென்பொருள் ஆக்கப் போட்டிகளில் வெற்றிபெற்ற தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

**பரிசில் பெற்றோர்**

நாகரத்தினம் ராஜன் (**சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்**- முதலாமிடம்), எஸ்.பரம் தில்லைராஜன் (டிறிபேக் கல்லூரி ஆசிரியர்), வீ.சசிகலா (டிறிபேக் கல்லூரி மாணவி).

**சான்றிதழ் பெறும் மாணவர்கள்**

***சாவகச்சேரி மகளிர் கல்லூரி:*** எஸ்.ஆர்த்திகா, எஸ்.ஜெகனி, ரி.அபிகா, எம்.ஜெசிந்தா.

***சாவகச்சேரி இந்துக் கல்லூரி:*** ஆர்.சஜீவன், ஆர்.மைத்திரேயி, பீ.தனுஷா, ஆர்.தர்மிகா, எஸ்.தினேசன், எஸ்.ஸ்ரீரேகா, யு.ருஷானி, எஸ்.நிஷாந்தி, எம்.மோகன்ஜா, ரி.வராகினி

***சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி:*** பி.திலீபன், கே.நிஷாந்தன், என்.கிருஷாந்த், எஸ்.பர்மிலா, எஸ்.நிரோஜன், எஸ்.கபிலன், ஏ.சஜீவன் ராஜு, ஏ.சங்கிகா ராஜு. (202-207)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 01 1932



மறைவு 30 03 2007

அமரர் கணபதிப்பிள்ளை செல்வரத்தினம் (ஆசாரி)

திதி: 18.03.2008

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அவை அனைத்தும் உங்கள்
அன்புக்கு ஈடாகுமா!
அகிலத்தை விட்டுச் சென்றாலும்
அழியாது உம் நினைவு எமைவிட்டு!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

இராமகிருஷ்ணா ஒழுங்கை,
கோண்டாவில். (72030) குடும்பத்தினர்.


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச்18

வடலியடைப்பு புதறானை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக தினத்தையொட்டி சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து வீதியுலாவும் இடம்பெறும். (202)

* * *

நல்லூர்,மார்ச்18

கொக்குவில் தாவடி ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 11.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிமுதல் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (202-111)

* * *

வலிவடக்கு,மார்ச்.18

மல்லாகம் கோணப்புலம் ஞான வைரவர் கோயில் அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 29ஆம் திகதி வரை அலங்கார உற்சவம் இடம்பெறவுள்ளது. (202-86)

## பருத்தித்துறை மாவந்தெணி பிள்ளையார் ஆலயத்தை புனரமைக்க ஏற்பாடு

வடமராட்சி,மார்ச்18

பருத்தித்துறை, தம்பசிட்டி, மாவந்தெணிப் பிள்ளையார் கோயில் புதிதாக் கட்டப்பட்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான பாலஸ்தாபனம் இம்மாத இறுதியில் நடைபெற்று ஆவணி சதுர்த்திக்கு முன்பாக பூர்த்திசெய்து புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடத்தப்படவுள்ளதாகக் கோயில் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (202-160)

## மணற்காட்டு முகாமில் தினமும் கழிவு அகற்ற ஏற்பாடு

கட்டைவேலி,மார்ச்18

வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல் முகாமில் உள்ள மலசலகூடங்களிலிருந்து தினமும் மூன்று தடவைகள் மலசலகூடங்களின் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இதற்கெனப் பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான டிரக்டர் வண்டியுடன் இணைந்த கழிவுறுஞ்சி வாகனம் மணற்காட்டுப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாகனத்தின் மூலம் இடைத்தங்கல் முகாமில் உள்ள மலசலகூடங்களின் கழிவுகள் தினமும் மூன்று முறை அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணி தொடர வேண்டும். இதனால் முகாமில் சுகாதாரத்தைப் பாதுகாக்கக்கூடியதாக இருக்கும் என அப்பகுதி சுகாதாரப் பரிசோதகர், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எம். சிறீஸ்கந்தகுமாரிடம் கேட்டுள்ளார். (202-275)

# தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால், முதியோருக்கு அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்18

தென்மராட்சி பிரதேச செயலகத்தினரால் முதியோர் அடையாள அட்டை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடையாள அட்டைகள் தயாரிப்பதற்குரிய இயந்திரம் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளதையடுத்து இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் வதியும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்த பின்னர் தத்தமது பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் சமூக சேவைகள் பிரிவில் 3 முத்திரை அளவு புகைப்படத்துடன் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார்.


**இதோ,**

**இளமைத் துடிப்புமிக்க முழுமையான, திருப்திகரமான, பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச் செய்து, பூரிக்கச் செய்வதற்கும் விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும் நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!**

100% இளமையையும் வலிமையையும் தரும்

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:-
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:- 6382) AR/PR/No: 228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/551631) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 04 1941



மறைவு 18 03 2003

அமரர் செல்லப்பா தங்கராஜா
(இளைப்பாறிய அதிபர், யா/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை)

திதி: 22.03.2008 சனிக்கிழமை

*எத்தனையோ! புதிய அனுபவங்கள் பெற்றுக்கொண்டோம்*
*கருத்துக்கள் புரிந்துகொண்டோம் பாதைகள்*
*தெரிந்துகொண்டோம் ஆனாலும் எங்கள்*
*அனுபவங்களில்.... கருத்துக்களில் .... பாதைகளில்*
*என்றும் நீங்களே!*

தும்பளை வீதி,
பருத்தித்துறை. (72052)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 05 1926



மறைவு 15 03 1992

அமரர் காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: 18.03.2008

அன்பால் எங்களை அரவணைத்து
அறிவால் எங்களை உயர்த்தி
வாழவைத்த பப்பாவே!
பண்பால் பலர் போற்ற பாரினிலே
வாழ்ந்திட்ட தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:


சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (72078)

அன்பின் மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



உ
சிவமயம்

## ஆறாம் மாத நினைவுநாள் திதி



உரும்பிராய் - ஆசிரியபிரான்
கார்த்திகேசு இரத்தினம்

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, உரும்பிராய் சந்திரோதய வித்தியா சாலை ஆகியவற்றில் சேவை புரிந்து இளைப்பாறிய ஆசிரியர்)

பூவுலகு: 24.07.1927

சிவகதி: 23.09.2007

**திதி வெண்பா**

*சீர்சால் சிறப்பின் சர்வசித்து புரட்டாதியில்*
*பேரார் பூர்வபக்க துவாதசியே - நீரர்*
*சிறப்புடனே வாழ்ந்து சிவனடியைச் சேர்ந்த*
*இறப்பில் இரத்தினத்தின் திதி.*

*சிவபதமடைந்த திதி:*
*புரட்டாதி மாத பூர்வபக்க துவாதசி*

6ஆம் மாத நினைவு நாள் திதி:
*பங்குனி மாத பூர்வபக்க துவாதசி*
*18.03.2008 செவ்வாய்க்கிழமை*

### அப்பாவிற்கு எம் வணக்கம்

பொன்னான பொழுதை யெல்லாம்
புனிதமுள நாள்களாய் மாற்றியுமே
என்னாளும் வாழ்ந்த இரத்தினமே
ஏந்தலே ஆசிரியப் பெருந்தகாய்
முன்னாளில் முறுவலுடன் நீ வாழ்ந்தே
மற்றோரையும் மகிழ்வித்து வாழ்ந்தாயே
என்னிலும் எனக்கு நல்லார்
இவ்வுலகில் இல்லையென வாழ்ந்தனையே!

செந்தமிழும் ஆங்கிலமும் தெரிந்தவரே
சென்மமெலாம் கல்விக்காய் உழைத்தவரே
நொந்தவரும் நோகாதவரும் போற்றுகின்ற
நுண்மாண் நுழைபுல மிக்கவரே
தந்தையோடு தாயையுமே நேசித்து
தக்கபடி சோதரரை நெறிப்படுத்தி
எந்தரமும் உலகவர்கள் போற்றிடவே
எழிலாக வாழ்ந்தவரே எம் வணக்கம்!

சிரிக்கவைக்கு முன் திறமையாலே
சிவாயநம சிவாயநம என்றென்றே
மரிக்கும் அளவும் உச்சரித்தே
மரியாதை யுடனே வாழ்ந்து
பரிவுடனே மாணவரைப் பாதுகாத்து
பாங்கான ஆசிரியத் தொழிலை
பரித்தியாகம் செய்தவெம் அப்பாவே
பண்பான நின்போக்கு பகரொணாதே!


திருமதி இராசேஸ்வரி இரத்தினம்
(மனைவி),
மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
(72033)



## மகளிருக்கான 4 நாள் அழகுக்கலை பயிலமர்வு


அடிப்படை முக அழகுக்கலை (**Basic Facial**) கூந்தல் அலங்காரங்கள், சருமப் பாதுகாப்பு மற்றும் இந்து,கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், மடிசார்,குஜராத், கூர்க்காஸ், சிங்கப்பூர் முறைகளிலான சேலை அணிவிக்கும் முறைகள் என்பன எதிர்வரும் 20ம், 21ம், 22ம்,, 23ம் நாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப. 1.00 மணிவரை போதிய விளக்கங்களுடனும் குறிப்புகளுடனும் குறைந்த கட்டணத்தில் நடைபெறும். வகுப்புகளில் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் வழங்கப்படும்.



*மேலும் விபரங்களை பி. ப. 1.00வரை அறிந்து கொள்ளலாம்*

**கலாலயா**
*பயிற்சியகம்*

23 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சிநிலையம்



*மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.* [ பெருமாள் கோயிலுக்கு அண்மையில் ]

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மீண்டும் பழைய பல்லவி

கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் என்ற பெயரில் மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகம் நடத்தப்போகும் அரசியல் குயுக்தி நாடகத்தில் நடிப்பதா, இல்லையா என்பது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் கூடி ஆராய இருக்கின்றது என்ற செய்தி மெல்லக் கசிந்திருக்கின்றது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் ஒன்றரை லட்சம் துருப்புகள் மூலம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, புலிகளை வன்னிக் காட்டுக்குள் முடக்கி வைத்துக்கொண்டு, அப்போதைய இலங்கை அரசின் இராணுவத்தையும் துணைக்குச் சேர்த்துக்கொண்டு, இந்தியத் தரப்புத் தனது ஆசீர்வாதத்தோடு முன்னெடுத்த அதே திட்டம் சற்று மாறுதலோடு மீண்டும் இப்போது மேடையேற வருகிறது.

அப்போது, வடக்கில் ஒரு தேர்தலை நடத்தாமலேயே தனது கைப்பொம்மைகளைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக்கிக் கொண்டு, கிழக்கில் மட்டும் தனது அதிகாரத்தின் கீழ் மாகாணத் தேர்தலை இந்தியா நடத்தியது.

இப்போது, சற்று மாறுபாடாக வடக்கைக் கிழக்கிலிருந்து பிரித்து, தமிழர் தாயகத்தைத் துண்டாடிவிட்டு, கிழக்கில் மட்டும் கிழக்கு மாகாணசபைக்கென ஒரு தேர்தல் - இந்திய ஆசீர்வாதத்துடன் - குறிப்பாகக் கவனிக்கவும் இப்போதும் இந்திய ஆசீர்வாதத்துடன் - நடத்தப்படுகின்றது இலங்கை அரசுத்தரப்பால்.

அன்றைய தேர்தலில், அப்போதிருந்தே தமிழர்களின் தேசிய எழுச்சியைப் பிரதிபலித்துவந்த தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியோ பங்குபற்றவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறையை வெளியில் பெரிய விவகாரமாகப் படம் போட்டுக் காட்டிவிட்டு அப்போது நடந்த தேர்தலும் அதையொட்டிய முயற்சிகளும் கடைசியில் என்னவாயின? உண்மையான தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலிக்காமல், இந்தியாவினால் வலிந்து திணிக்கப்பட்ட அந்த அரசியல் தலைமைகள் இன்று எங்கே மறைந்தன?

இறுதியாக, இந்தியாவின் நேரடி முயற்சியில் அப்போது முன்னெடுக்கப்பட்ட மாகாண நிர்வாகம் செத்துச் செயலிழந்து போனது. இந்தியாவின் மிக நீண்ட, சிக்கலான, குழப்பம் மிகுந்த அரசியல், இராணுவத் தலையீட்டு முயற்சிகளும் தந்திரோபாயங்களும் பாதை தெரியாது முட்டுச் சந்துக்குள் முடங்கிப் போயின. அந்த முயற்சிகளுக்கு அப்போது முண்டு கொடுத்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அரசியல் பாலைவனத்தில் அந்நியப்பட்டது; அந்த காரத்தில் கவனிப்பாரின்றித் தடுமாற விடுபட்டது.

தமிழர்களுடைய உண்மையான பிரதிநிதித்துவத்துக்கு வாய்ப்பளிக்காமல் அதனை ஒட்ட நறுக்கி - ஒதுக்கிவிட்டு -

தமிழர் தாயகத்தைத் துண்டாடும் தனது நயவஞ்சகத் திட்டத்தை சட்டத்தின் பேரினால் ஒப்பேற்றி -

தனது அடிவருடிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் காட்டி, அவர்களை அதிகாரத்துக்குக் கொண்டுவந்து, தனது பிடிக்குள் தமிழின இருப்பை அடக்கி வைக்கும் தென்னிலங்கை மேலாண்மை மனோபாவத்தின் உள்ளார்ந்த சதித் திட்ட செயற்பாடாகவே இந்தத் தேர்தல் கட்டவிழ்கின்றது.

தமிழரின் போராட்ட சக்திகளை ஓரம்கட்டி, அவர்களின் போராட்ட வலுவை இராணுவ ரீதியாகத் துவம்சம் செய்து, தனது அடிவருடிகளை அதிகாரத்தில் அமர்த்த இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா நேரடியாக எடுத்த முயற்சிகளை, இன்று புதுடில்லியின் ஆசீர்வாதம் மற்றும் வழிகாட்டலுடன் மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகமும் முன்னெடுக்க முயல்கின்றது. அவ்வளவே.

அன்று அந்தத் தேர்தலில் தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகள் ஓரம்கட்டிப் பங்குபற்றாமல் தவிர்க்கப்பட்டமையால் - அல்லது அவர்களாக ஒதுங்கிக்கொண்டமையால் - தமிழர் தரப்புக்கு அப்படி ஒன்றும் பெரிய பாதகமோ, பாதிப்போ ஏற்பட்டுவிடவில்லை. மறுபக்கத்தில் புதுடில்லியின் அதிகாரத் திணிப்பு முயற்சியே பட்டை கழன்று செத்துச் செயலிழந்து போனது.

அந்தப் பின்னணியிலேயே இத்தேர்தலிலும் போட்டியிடுவதா என்ற விவகாரத்தைத் தமிழர் தரப்பு சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழர் தரப்புகள் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்றவை - பங்குபற்றாமல் தவிர்த்தமைக்கு என்னென்ன காரணங்கள் அடிப்படையாக விளங்கினவோ அவை இப்போதும் அப்படியே கிழக்கில் நீடிக்கின்றன.

அந்த நிலைமையையும் விட மிக மோசமான கட்டம்தான் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தற்போது உள்ளது.

ஆயுத அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. அரசுப் படைகளின் ஆதிக்கப் போக்குக்கும், அரசுப் படைகளின் அடிவருடிக் கூட்டங்களான ஒட்டுக்குழுக்களுக்கும் மாறாகச் சிந்திக்கும் தமிழ்த் தேசியப் போக்குடையோர் வேட்டையாடப்படுகின்றனர்.

பல லட்சக்கணக்கில் உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த அகதிகள் மரங்களின் கீழும், தற்காலிகக் கொட்டகைகளிலும், அகதிகளின் நலனோம்பு நிலையங்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சம் புகுந்து தவிக்கின்றனர். வாக்களிக்க அவர்களுக்கு வாய்ப்பு வசதிகளுமில்லை. அதற்கான எண்ணமும் அவர்களுக்கு இல்லை.

சுயாதீனமான - சுதந்திரமான - அச்சுறுத்தலற்ற - பிரசாரத்துக்கு வழியே இல்லை என்பது பளிங்குத் தெளிவாகத் தோற்றுகின்றது.

கிழக்குத் தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளே தங்கள் மாவட்டத்துக்குத் திரும்ப முடியாத அளவுக்கு அராஜகச் சூழலே அங்கு நீடிக்கின்றது. அவர்களது உறவினர்களைக் கடத்திப் பணயம் வைத்துக்கொண்டு, அவர்களது நாடாளுமன்ற வாக்குரிமைக்குப் பேரம் - கப்பம் - பேசப்படுகின்றது.

இந்தச் சீத்துவத்தில் ஜனநாயகத் தேர்தல் என்பதும், வாக்களிப்பு என்பதும் வெறும் கண்துடைப்பு என்பது அப்பட்டமாகப் புலப்படும் விடயங்களாகும்.

தனது ஆதிக்க அதிகாரத்தைப் பயன்படுத்தி, தில்லுமுல்லுகளை நடத்தித் தனது கேவலத் திட்டத்தை இந்தத் தேர்தல் நாடகம் மூலம் ஒப்பேற்ற வியூகம் வகுத்து நிற்கிறது கொழும்பு.

அதன் தந்திரோபாயத்திற்குக் களப்பலியாகும் விதத்தில், இத் தேர்தலில் தமிழர் தரப்பு தலையைக் கொடுத்துத் தானும் ஏமாறி, ஆட்சி அதிகாரம் தமிழரை ஏமாற்ற வாய்ப்புமளித்து, வடக்கு - கிழக்கு மாகாணப் பிரிப்பை ஏற்பது போன்ற அங்கீகாரத்தையும் வழங்கித் தமிழர்கள் தம் தலையில் தாமே மண் அள்ளிப் போட்டுக் கொள்வதா? தலைவர்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய விவகாரம் இது!

வலிந்து தாக்குவதை நிறுத்தினால்

# புதிய ஒப்பந்தம் ஒன்று பற்றி பேசவும் விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர்

கிழக்கில் மாகாண சபைத் தேர்தலைகளை மே மாதத்தில் நடத்தி முடிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கும் நிலையில், அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் வெறும் கேலிக்கூத்து என வர்ணிக்கப்படுகின்றது. அதேவேளை நாட்டில் சீர்கெட்டுவரும் மனித உரிமை நிலையைக் கவனத்தில் எடுத்து செயற்படுத்தும்படியாக சர்வதேச சமூகத்தினரின் கடுமையான நெருக்குதல்களுக்குள்ளாகி வருகிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

**போர்க்கள நிலை இலகுவானதாக இல்லை**

பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் அரச படைகள் தரப்பில் 900 பேர் இறந்து அல்லது காயமடைந்தள்ளார்கள் என்பது - வன்னியில் நடக்கும் போரானது அவ்வளவு இலகுவானதாக இல்லை என்பதைக் காட்டுகிறது. அதேவேளை அரச படைகளால் விடுவிக்கப்பட்டுள்ள கிழக்கில், அரசினால் ஆதரவளிக்கப்பட்டுவரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உட்பட துணைப் படைக் குழுக்கள் அனைத்தும் ஆயுதங்களுடன் சுற்றித் திரிந்து வருகின்றன. அண்மையில் ஆழ ஊடுருவும்

**'சண்டே லீடர்' அரசியல் விமர்சனத்திலிருந்து...**

அரச படைகளின் குண்டுத்தாக்குதலில் மரணமான நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசனின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்ற கிளிநொச்சிக்குச் சென்றிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய அரசியல் நிலைமை குறித்து த.ஈ.வி.புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனுடன் நடத்தியுள்ள கலந்துரையாடலில் பல உருசிகரமான விடயங்கள் வெளிவந்துள்ளன.

**பேச்சு நடப்பது அரசின் கையில்**

அரசாங்கம் போரைத் தொடர்ந்து நடத்த விரும்பினால் அந்தச் சவாலை புலிகள் எதிர்கொள்ளத் தயாராய் உள்ளனர். பேச்சு நடத்த அரசு தயார் என்றால் அதற்கும் நாம் தயார். ஆனால் அது அரசின் கையில்தான் உள்ளது என்று நடேசன் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறியுள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து நாம் விலகிக்கொண்டுவிடவில்லை. அரசாங்கம்தான் ஒருதலைப்பட்சமாக ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துள்ளது. முழு அளவிலான தீர்வு ஒன்றை நோக்கி பணியாற்றவும் நோர்வேயின் அனுசரணையை ஏற்றுக்கொள்ளவும் நாம் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அதுவும் அரசாங்கத்தின் கையில்தான் உள்ளது என்றும் கூறியுள்ளார் நடேசன்.

பேச்சு நடத்த நாம் தயார். ஆனால் அதற்கான சுமுக சூழ்நிலை இருக்க வேண்டும். அதாவது மோதலை நிறுத்துவதற்கான ஒரு போர்நிறுத்தம் ஏற்படவேண்டும் -

போர்நிறுத்தத்திற்கும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கும் இடையிலான நுண்ணிய வேறுபாட்டை விளக்கும் வகையில் கருத்து வெளியிட்ட அரசியல் பொறுப்பாளர், போர்நிறுத்தம் இருந்தால் அரசுடன் பேச நாம் தயார். அந்தப் பேச்சின்போது போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்தோ அல்லது ஒரு புதிய போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்தோ நாம் பேசமுடியும் - என்று கூறியுள்ளார்.

நடேசனின் இவ்விதமான கூற்று புலிகள் பலவீனமடைந்திருப்பதையே காட்டுகிறது என்று அனேகர் அவசரப்பட்டுத் தீர்மானித்துவிடக் கூடும். ஆனால், மனித உரிமை சீர்கேடு காரணமாக அரசாங்கம் நெருக்குதலுக்குள்ளாகியுள்ள நிலையில் சர்வதேச நாடுகளைத் திருப்திசெய்யும் நோக்கத்தில் புலிகள் இவ்வாறு அறிவித்தல்களை வெளியிடக்கூடும். இந்த அடிப்படையில்தான் புலிகள் தற்காப்பு யுத்தம் ஒன்றையே நடத்திவருவதாகவும் பேச்சுக்குத் தயாராய் இருப்பதாகவும் காட்டிக்கொள்கின்றார்கள்.

**களநிலை பற்றிய கவலை வேண்டாம்**

இந்தக் கலந்துரையாடல்களின் போது, போர் தொடருமானால் களநிலைமைகள் என்னவாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடேசனிடம் கேட்டிருக்கிறார்கள்.

போரைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். களநிலைமைகள் குறித்து நாம் மிக உறுதியோடுதான் இருக்கிறோம் என்று அவர் பதில் கூறியுள்ளார்.

## இப்போதைய நிலைமை குறித்த அனைத்துலக பிரதிபலிப்பை எதிர்பார்க்கிறார்கள்

ஒவ்வொரு நாளும் 20 அல்லது 30 புலிகள் கொல்லப்படுவதாக இலங்கை அரசு கதைகளைக் கூறிவருகின்றது. இவைகளை மறுத்துக்கொண்டிருக்க நாம் விரும்பவில்லை. ஏனென்றால் மக்கள் உண்மையை உணரும்போது அரசுக்கு எதிராக தாங்களாகவே மாறிவிடுவார்கள். வன்னிக்குள் அரச படைகள் வருவதை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. அரச படைகளை நெற்றிக்கு நேர் சந்திக்க நாம் தயாராய் இருக்கின்றோம் என்றும் அரசியல் பொறுப்பாளர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் -

**வலிந்து தாக்கவில்லை**

நாம் இன்னமும் வலிந்து தாக்குதல்களில் இறங்கவில்லை. ஏனென்றால் அரசாங்கத்தின் போர் நடவடிக்கைகளுக்கு அனைத்துலக நாடுகள் எவ்வாறு பிரதிபலிக்கப் போகின்றன என்பதைக் கண்டறிய நாம் விரும்புகின்றோம் என்று கூறியுள்ளார் நடேசன்.

பார்க்கப்போனால் அரசாங்கத்தை அனைத்துலக சமூகத்தின் முன்னால் மூன்று முனைகளில் நெருக்குவதற்குப் புலிகள் முயல்வது தெரிகிறது. மனித உரிமை மீறல்கள், போர்நிறுத்த ஒப்பந்த நிராகரிப்பு, தற்காப்பு நடவடிக்கைகளுக்கெதிரான அரசாங்கத்தின் வலிந்த தாக்குதல்கள் ஆகியவையாகும்.

**எப்படி எதிர்கொள்வது என்பதைத் தீர்மானிப்போம்**

அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதல்களைத் தொடர்வதை அனைத்துலக சமூகம் ஏற்றுக்கொள்ளுமானால், அப்படியான நிலைமையை எப்படி எதிர்கொள்வது என்பதைப் புலிகள் தீர்மானிப்பார்கள் என்றும் நடேசன் தெரிவித்துள்ளார்.

புலிகள் தமது அடுத்த நடவடிக்கை பற்றித் தீர்மானிப்பதற்கு முன்பாக அனைத்துலக நாடுகள் தற்போதைய நிலைமையை எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பதை காத்திருந்து பார்க்கப்போகிறார்கள் என்பதையே நடேசனின் இந்தக் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. (ப)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இருவருக்கு சிறைத் தண்டனையும் அபராதமும்

பருத்தித்துறை,மார்ச்18

சட்டவிரோதமாக 'ஹன்ரர்' வாகனத்தில் கடற்கரை மணல் ஏற்றிச்சென்ற இருவருக்கு சிறைத் தண்டனையும் அபரா தமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது. சட்டவிரோதமாக கடற்கரை மணல் ஏற்றிச்சென்றார்களெனக் குற்றஞ்சாட்டி நெல்லியடிப் பொலிஸார் துன்னாலை தெற்கைச் சேர்ந்த கந்தையா பாலகிருஷ்ணன், மாசிலாமணி பாலச்சந்திரன் ஆகியோரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிபதி முதலாம் எதிரிக்கு 40 ஆயிரம் ரூபா அபராத மும் 6 மாத சிறைத் தண்டனையும் அபராதத்தைத் செலுத்தத் தவறினால் 6 மாதச் சிறைத்தண்டனையும் - இரண்டாம் எதிரிக்கு 30 ஆயிரம் ரூபா அபராதமும் 4 மாத சிறைத்தண்டனையும் அபராதத்தைச் செலுத்தத் தவறினால் 4 மாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

சட்டவிரோத மணல் பறிமுதல் செய்யப்பட்டது. மணலை ஏற்றிய ஹன்ரர் வாகனம் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (202-218)

## தேசிய பாடசாலைகளில் 8 வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

அச்சுவேலி,மார்ச்18

தேசியப் பாடசாலைகளில் எட்டு வருடங்களுக்கு மேல் தொடர்ந்து கடமையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை தேசிய பாடசாலைகள் ஆசிரியர் இடமாற்றச் சபை மேற்கொண்டு வருகிறது.

குறித்த ஒரு தேசியப் பாடசாலையில் தொடர்ச்சியாக 8 வருடங்களுக்கு மேல் கடமை புரிந்துகொண்டிருக்கும் ஆசிரியர்கள் தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமைய வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

தேசியப் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களின் விவரங்கள் வேறுபட்ட தகவல் சேகரிப்பு நடைமுறைகள் மூலம் துல்லியமாக முன்கூட்டியே சேகரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களிடம் நேரடியாக சேகரிக்கப்பட்ட தகவல்கள், அதிபர்கள் ஊடாக அந்தரங்கமான முறையில் திரட்டப்பட்ட தகவல்கள்களின் அடிப்படையிலும் இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. (202-11)

### நாளை

| | |
|---|---|
| பங்குனி - 06 | 19.03.2008 |
| | புதன்கிழமை |
| திதி: திரயோதசி | மு.இ. 11.55வரை |
| நட்சத்திரம் : | மகம் |
| | பி.இ. 03.04வரை |
| பிரதோஷ விரதம் | |
| சுபநேரம் : | 04.48 - 06.18 |
| ராகுகாலம் : | 12.18 - 01.48 |

## அழகியற் கற்கைகள் தகுதிகாண் பரீட்சை பிற்போடப்பட்டது

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் 2007/2008 கல்வியாண்டில் கர்நாடக சங்கீதம்/ நடனம்/ நாடகமும் அரங்கியலும்/ கட்புலக்கலை ஆகிய கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கு இம்மாதம் 24, 25, 26ஆம் திகதி களில் நடைபெறவிருந்த தகுதிகாண் பரீட்சை ஏப்ரல் 8, 9, 10 ஆகிய திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அனுமதி அட்டை கிடைக்கப்பெற்ற பரீட்சார்த்திகள் அந்த அனுமதியட்டையை பிற்போடப்பட்ட பரீட்சைக்குப் பயன்படுத்தலாம். இப்பரீட்சை சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கல்லடி, மட்டக்களப்பில் நடைபெறும்.

மேலதிக விவரங்களுக்கு 065 222 2663 என்ற தொலைபேசி எண் ஊடாகத் தொடர்புகொள்ளுமாறு பல்கலைக் கழகப் பதிவாளர் கேட்டுள்ளார். (202)

## சுழிபுரம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
## வருடாந்தப் பொங்கல் விழா

விளக்கு வைத்தல்: இன்று (18.03.2008) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணி

முதலாம் பொங்கல்: 25.03.2008 செவ்வாய்க்கிழமையும்

இரண்டாம் பொங்கல்: 01.04.2008 செவ்வாய்க்கிழமையும்

இடம்பெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

வியாபாரம் செய்ய விரும்பும் வியாபாரிகள் அதற்கான பதிவுகளை 20.03.2008 வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

நன்றி

சுழிபுரம் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பரிபாலனசபை. (72098)

## பொருட்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இவ்வாரம் நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்த கலைச் சங்கமம் பொருள்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காலநிலை காரணமாக இது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(202)

## பிறந்த தின வாழ்த்துக்கள்
## போல் நிஷான் சந்திரேஸ்வரன்

(பரி.யோவான் கல்லூரி மாணவன்)




எக்காளத்தொனி சர்வதேச ஊழியங்களின் யாழ்.மாவட்ட தலைமைப் போதகர் பாஸ்டர் டானியல் சந்திரேஸ்வரன் - ஜெயந்தி தம்பதியரின் புத்திரன் போல் நிஷான் தனது பன்னிரெண்டாவது பிறந்ததினத்தை கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள எக்காளத்தொனி தலைமைச் சபையில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை நாங்கள் மனமார வாழ்த்துகின்றோம்.



18 • 03 • 2008

**பாஸ்டர் மேர்வின் குணசெல்வம்**
(ஸ்தாபகர், நிர்வாகி)
எக்காளத்தொனி சபையினர், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**சின்னையா வயிரவப்பிள்ளை**
**சிறிஸ்கந்தராசா**

அல்வாய் வடமேற்கை நிரந்தர வசிப்பிடமாகவும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் எம்முடன் நீண்டகாலமாக முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றி இம்மண்ணின் மக்களுக்குப் பாரிய தொண்டாற்றியவருமான எமது பாசத்திற்குரிய "சிறியண்ணர்" என அழைக்கப்படும் சி.வ.சிறிஸ்கந்தராசா அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு நாம் அதிர்ச்சியடைந்தோம். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி. (சி/551875)

அங்கத்தவர்கள்,
செயலக ஊழியர் நலன்புரிச்சங்கம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் PIRIMA சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் 20.03.2008 விநியோகிக்கப்படும்

* ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி
* P.ரவி - சாவகச்சேரி
* சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.

(72050)

## தவறிவிட்டது

சௌபாக்கியகுமார குருக்கள் மதனகுமார சர்மா என்பவருடைய தே.அ.அட்டை (871010706 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

110/13, சட்டநாதர் கோயில்,
மேற்கு வீதி, நல்லூர்.
T.P No. 021 222 9092 (72100)

## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



08.03.2008 அன்று சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள
உயர்திரு.
**செல்லையா பரராஜசிங்கம்**
(Special Trained English,. B.A. (English),. Dip - in Education)
ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் (IAS)
(வடமராட்சி கல்வி வலயம்)

பொங்குமுயர் மனங்களில் சேவையாளன்

ஆங்கில மொழிநடையில் வித்தகன்!
ஆசானாய் கற்பித்தலில் சாணக்கியன்!
பொங்குமுயர் மனங்களில் சேவையாளன்!
பற்றுடனே உறவுகளின் இணைப்பாளன்!
தாங்கிய பதவிகளில் மூச்சானவன்!
தரத்தினில் தங்கத்திற்கு நிகரானவன்!
பாங்குயர் பணிதனில் ஓய்வுபெற்றே
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்
வாழ்க பணி! தொடர்க சமூகப் பணி!

தங்கள் பாதையில் பின் தொடரும்...
அன்புப் பேரர்கள்
விஜேந்திரா (விஜய்)
சஜேந்திரா (சஜய்)

மாணிக்கபவனம்,
பொலிகண்டி
V.V.T (72096)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி செல்லக்கண்டு
**சந்திரோதயம்**

அன்னையின் மடியில்
25 ★ 05 ★ 1955

ஆண்டவன் அடியில்
19 ★ 03 ★ 2006

திதி: சதுர்த்தி

பெற்றெடுத்த நாள்முதல் பிரியமுடம் எமை அணைத்து
உற்றதெல்லாம் எமக்களித்து உவகை கொண்ட அம்மாவே!
நீர் செய்த சேவைக்கு இவ்வுலகில் ஈடேது
உம்மை விட இவ்வுலகில் ஈடு செய்ய உறவேது.

பருத்தித்துறை வீதி,
நாவலம்பதி,
அச்சுவேலி தெற்கு. (72105)

குடும்பத்தினர்.

## எங்கள் போராட்டம்....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று தமிழர்களுக்கு எதிராகப் போர்க்களத்தில் நின்று போரிடுகின்ற சிங்களச் சிப்பாய்களுக்கும் தமிழருக்கும் பிறந்த குழந்தைகள், தமிழர்களாக இருந்து சிங்களவராக மாறிய குழந்தைகள் இருப்பார்கள்.

**தமிழர்களை அழிப்பதில் சிங்களவர்களுக்குக் கணிசமான வெற்றி**

இலங்கை விடுதலையடைந்தபோது சிங்களப் பகுதிகளில் கணிசமான பாடசாலைகளில் தமிழ்ப் பிரிவுகள் இருந்தன. அவை எல்லாம் காலகதியில் இல்லாமல் போய்விட்டன.

இப்படித்தான் தமிழ் இனம் இங்கே அழிந்திருக்கின்றது. ஆகவே சிங்களவர்கள் தங்களின் முயற்சியில் கணிசமான வெற்றியைப் பெற்றிருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் தமிழீழத்தை மீட்டு எடுக்க வேண்டிய வரலாற்றுக் கடமையில் நாங்கள் தவறு இழைத்திருக்கின்றோம்.

எங்களின் இந்த விடுதலைப் போராட்டம் வெல்லாவிட்டால் தமிழினம் அழியும். இங்கு மட்டுமல்ல. உலகம் முழுவதும் வாழுகின்ற தமிழினம் கண்டிப்பாகக் கட்டாயம் அழியும்.

இந்த விடுதலைப் போராட்டம் வெற்றி பெறாவிட்டால் உலகத்தில் தமிழினம் என்ற ஒன்று இருந்தது என்பதனை வரலாறு தான் சொல்லும். நாங்கள் எப்படி வாழ்ந்தோம் என் பதனை தொல்பொருள் சான்றின் ஊடாகத் தான் இப்போது பார்க்கவேண்டியிருக்கின்றது.

முற்றாக அழிந்து போய்விட்டால் யாரும் இல்லாத நிலை உருவாகும். இப்படித்தான் பல நாடுகளில் நடந்திருக்கின்றது.

அமெரிக்காவில் நடந்தது அது தான். ஆஸ்திரேலியாவில் நடந்தது அது தான். இந்தியாவில் நடந்தது அது தான்.

இப்படி வரலாறுகள் உண்டு.

இன்று இந்த நூல் தமிழரைத் தட்டியெழுப்பும்.

தமிழினத்தின் இழிநிலையை தமிழருடைய மண், எப்படி பறிக்கப்பட்டது எப்படி ஒடுக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு இந்த நூல் மிகப் பெரிய சான்றாக இருக்கும் - என்றார் தமிழேந்தி.

## இரண்டாம் ஆண்டின் நினைவில்



அமரர்
**சின்னத்தம்பி கந்தையா**

மண் மகிழ
08 - 10 - 1929

விண் சிறக்க
10 - 03 - 2006

திதி: பூர்வபக்க ஏகாதசி

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் தந்தையே!
உம் நினைவு எம்மைவிட்டு அகலாதையா!
அன்பு என்பதன் அர்த்தம் புரிந்து அடுத்தவர் மனதை நோகடிக்காமல்
பாசம் என்ற பதத்தைப் புரிந்து பண்பு என்பதன் இலக்கணம் காத்துநின்ற
எமதருமைத் தந்தையே!

ஈராண்டு கடந்தபோதும் எம் நினைவில் இருந்து உறங்கிடுமா
உந்தனது நிலைவலைகள்

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள். (72095)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுவாமிநாதர்
**பாலசிங்கம்**

தோற்றம் 23-02-1924
மறைவு 19-12-2001



திருமதி பாலசிங்கம்
**சிவபாக்கியம்**

தோற்றம் 03-02-1930
மறைவு 25-03-2002

(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

திதி: துவாதசி

அவனியிலே அவதரித்த எமது அன்புத் தெய்வங்களே!
நீங்கள் எம்மை விட்டு சென்று ஏழு
ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
என்றும் நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி. (சி/551877)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



உள்ளத்தால்
உனையெண்ணித்
துடிக்கின்றோம் உத்தமனே!
**எம் ஜெயசிங்கா**

மானிடனாய்ப் பிறந்ததனால்
மனிதநேயம் நீ கொண்டாய்
தேனிலும் இனிய பல கதை
சொல்லி சிரிக்க வைப்பாய்
நானிலத்தே உன்னைப் போல்
நல்லோனைக் கண்டதில்லை
மேனி சிலிர்க்குமுந்தன்
மேன்மைகளை
நினைத்திட்டால்
வானிடையே இருந்து வரும் வார்த்தை போலுன் குரலோசை
ஊனினையும் உருக்கிடும் நீ மகனென்றால் மகளென்றால்
கோனினையும் வெல்லுமுயர் கொள்கையோனே ஜெயசிங்கா!
சடனியெமைக் குறுகவிட்டோ நீ குவலயத்தை நீத்திட்டாய்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

மகிமையுள்ள மானிடத்தின்
இழப்பை எண்ணிக் கலங்கும்
மாணிக்கராசா குடும்பத்தினர். (72092)

# 126 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது இங்கிலாந்து!



5 விக்கெட்டுகளை கைப் பற்றிய சைட்பொற்றம்

வெலிங்டன், மார்ச் 18

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 126 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவுசெய்தது.

வெற்றிக்கு மேலதிகமாக 196 ஓட்டங்கள் தேவையென்ற நிலையில் நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி வெறும் 69 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் மிகுதியாகவிருந்த 4 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது. இரண்டாவது டெஸ்ட் வெலிங்டனில் நடைபெற்று வந்தது. இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 342 ஓட்டங்களையும், நியூஸிலாந்து 198 ஓட்டங்களையும் எடுத்தன. 144 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து 293 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன்படி நியூஸிலாந்தின் வெற்றியிலக்காக 438 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. இலக்கைக் கலைத்த நியூஸிலாந்து அணி 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 242 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று போட்டியின் 5ஆம் மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது. களத்தில் நின்ற மக்கியூலம், வெட்ரோறி ஆகியோர் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். அணிக்கு நம்பிக்கை தருவார் என எதிர்பார்க்கப்பட்ட அணித்தலைவர் வெட்ரோறி ஓட்டமெதுவும் சேர்க்காமல் சைட்பொற்றமின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

தொடர்ந்து வந்த கைல் மில்ஸ் 13 ஓட்டங்களுடன் சைட்பொற்றமின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார். பின்னர் இணைந்த மக்கியூலம் - கிலெஸ்பி ஜோடி சிறிதுநேரம் களத்தில் நின்று இங்கிலாந்தின் வெற்றியைத் தாமதப்படுத்தினார்கள். இருவரும் 11 ஓவர்கள் இணைப்பாட்டம் புரிந்து 41 ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்நிலையில் கிலெஸ்பி 9 ஓட்டங்களுடன் அண்டர்ஸனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் போராடிக்கொண்டிருந்த மக்கியூலம் கடைசி விக்கெட்டாக பனிஷரின் சுழலில் விக்கெட்டைப் பறிகொடுக்க நியூஸிலாந்தின் இரண்டாவது இன்னிங்ஸ் 311 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. இதன்மூலம் இங்கிலாந்து 126 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவுசெய்தது. இறுதிவரை போராடிய மக்கியூலம் 116 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகள் அடங்கலாக 85 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் சைட்பொற்றம் 5 விக்கெட்டுகளையும், அண்டர்ஸன், ஸ்ருவேட் போர்ட் ஆகியோர் தலா 2 விக் கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். போட்டியின் சிறப்பாட்டக்காரராக ரிம் அம்புரோஸ் தெரிவானார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பின்னர் இங்கிலாந்துக்குக் கிடைக்கும் முதலாவது டெஸ்ட் வெற்றி இதுவாகும். அத்துடன் 2005ஆம் ஆண்டிற்குப் பின்னர் அந்நிய மண்ணில் அந்த அணிக்குக் கிடைத்த முதலாவது வெற்றியாகவும் இது விளங்குகின்றது. 2005ஆம் ஆண்டு தென்னாபிரிக்க மண்ணில் வெற்றியைச் சுவீகரித்திருந்தது.

இப்போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றதன் மூலம் டெஸ்ட் தொடர் 1-1 எனச் சமனிலையடைந்துள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி நேப்பியரில் ஆரம்பமாகின்றது.

## ஹர்பஜன் விவகாரம்; ஹைடன் வருத்தம்

மெல்போர்ன், மார்ச் 18

''வார்த்தைகளைச் சரியாகத் தேர்ந்தெடுத்து பயன்படுத்தவில்லை. ஹர்பஜனை பயன்படாத களை என விமர்சித்தமை தவறு தான். அதற்காக வருந்துகிறேன்,'' - என ஆஸ்திரேலிய வீரர் மத்தியூ ஹைடன் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த முத்தரப்பு ஒருநாள் தொடரில் இந்திய அணி, ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி கிண்ணத்தை வென்றது. இத்தொடர் முழுவதும் இரு அணி வீரர்களும் அடிக்கடி வார்த்தைப் போரில் ஈடுபட்டனர். தன்னைக் குரங்கு என கேலி செய்தாரென ஹர்பஜன் மீது சைமண்ட்ஸ் குற்றஞ்சாட்டினார்.

அதிரடி ஆரம்ப வீரர் ஹைடன், ஹர்பஜனை 'பயன்படாத களை' என வெளிப்படையாக ஊடகங்களுக்கு பேட்டி அளித்தார். இப்படி பிரச்சினைகள் அனைத்து ஹர்பஜனைச் சுற்றி சுற்றி வந்தன. எதிர்வரும் 18ஆம் திகதி தொடங்கவிருக்கும் ஐ.பி.எல்., ருவென்ரி/20 தொடரில் சென்னை அணிக்காக ஹைடன் பங்கேற்கிறார். இந்நிலையில் ஹர்பஜனை தான் திட்டியமை தவறு; அதற்காக வருந்துகிறேன் என ஹைடன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

''எனது விமர்சனத்தை ஹர்பஜன் எப்படி எடுத்து கொண்டார் என்பது தெரியவில்லை. ஹர்பஜன் குறித்து விமர்சித்த போது சரியான வார்த்தையைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்த தவறிவிட்டேன். 'பயன்படாத களை' என்பதற்குப் பதிலாக வேறு வார்த்தையை உபயோகப்படுத்தி இருக்கலாம். எனது 15 ஆண்டு கால கிரிக்கெட் வாழ்க்கையில் ஒரு சரிவைச் சந்தித்துள்ளேன். ஹர்பஜனை அவமானப்படுத்தும் நோக்கத்தில் நான் அப்படிச் சொல்லவில்லை. தற்போது ஹர்பஜனுடன் பேச விரும்புகிறேன். எங்களது உறவில் இதன் மூலம் நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.'' - இவ்வாறு ஹைடன் தெரிவித்தார்.

## இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன் - பாலாஜி

ஓசூர், மார்ச் 18

இந்தியக் கிரிக்கெட் அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன் என்று தமிழகத்தைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் எல்.பாலாஜி கூறியுள்ளார்.

ஓசூர் அதியமான் பொறியியல் கல்லூரியில் சனிக்கிழமை நடை பெற்ற விளையாட்டு விழா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அவர், நிருபர்களிடம் மேலும் கூறியவை வருமாறு:-

''தற்போது முழு உடல் தகுதியுடன் உள்ளேன். விரைவில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா சார்பில் விளையாடுவேன். ஆஸ்திரேலியாவில் வெற்றி பெற்றது இந்தியாவுக்கு பெருமை. அதேபோல் 19 வயது இந்திய அணியும் உலகக் கிண்ணத்தை பெற்றதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

''கபில்தேவ் அணித்தலைவராக இருந்த போது இந்தியா உலகக் கிண்ணத்தை வென்றது போல் வரும் உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா வெல்லும் என்ற நம்பிக்கை உள்ளது. தற்போது உலக அளவில் இந்தியக் கிரிக்கெட் அணி முதலிடத்தில் உள்ளது. இளைஞர்கள் அதிக அளவில் கிரிக்கெட் விளையாட வேண்டும்.'' - என்றார் பாலாஜி.

## அமெரிக்காவுக்கு எதிராக ஈரான் மக்கள் வாக்களிப்பு

தெஹ்ரான், மார்ச் 18

ஈரானிய பொதுத் தேர்தலில் தனது வேண்டுகோளுக்கிணங்க அமெரிக்காவுக்கு எதிரான கொள்கைகளுக்கு மக்கள் வாக்களித்துள்ளனர் என்று அந்த நாட்டின் ஆன்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமேனி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தலில் குழப்பங்கள் ஏற்படும் என்று கனவுகண்டுகொண்டிருந்த அமெரிக்காவுக்கு மக்கள் சரியான பாடம் கற்பித்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


எதிர்பார்ப்புக்கிணங்க கொன்சர்வேடிவ் வேட்பாளர்களே வெற்றிவாகை சூடியுள்ளார்கள். நாடாளுமன்ற மீள இவர்களின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வந்துள்ளது.

290 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் கொன்சர்வேடிவ்களுக்கு 163 ஆசனங்கள் கிடைத்துள்ளன. சீர்திருத்தவாதிகளுக்கு 33 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறிப்பாக தலைநகரான தெஹ்ரானில் இவர்கள் மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளார்கள். நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்ற தலைநகரின் வெற்றியே அதிமுக்கியமான தொன்றாகும்.

# திபெத்திய ஆர்ப்பாட்டக்காரர் மீது பலவந்தம் கையாளப்படவில்லை

## சிரேஷ்ட சீன அதிகாரி விளக்கம்



லாஸா, மார்ச் 18

திபெத்திய ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்குவதற்கு துருப்புகள் பலவந்தத்தைக் கைக்கொள்ளவில்லை என்று கூறியுள்ள சிரேஷ்ட சீன அதிகாரியொருவர், பலவந்தம் பிரயோகிக்கப்பட்டதென்ற கூற்றை தன்னால் ஏற்க முடியாதென்றும் அதனைத் தான் நிராகரிக்கின்றார் என்றும் தெரிவித்துள்ளார்.

"ஆர்ப்பாட்டப் போராட்டங்களைக் கைவிடுவதற்கு கலகக்காரர்களுக்கு விதிக்கப்பட்ட காலக்கெடு காலாவதியாகி விட்டது. அவர்கள் அதற்கு செவிமடுத்துள்ளார்கள். தற்போது லாஸா இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது" - என சீன சிரேஷ்ட அதிகாரிகளில் ஒருவரான திபெத்திய பிராந்திய ஆளுநர் கியாங்பே புன்கொக் குறிப்பிட்டுள்ளார்.

திபெத்தை விட்டு வெளியேறி அஞ்ஞாதவாசமிருக்கும் திபெத்திய தலைவர்கள், ஆர்ப்பாட்டங்களை ஒடுக்க சீனாவால் மேற்கொள்ளப்பட்ட பலவந்த பிரயோகத்தின் போது குறைந்தபட்சம் எண்பது பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

இக் குற்றச்சாட்டை ஆளுநர் அடியோடு மறுதலித்துள்ளார்.

''இது மிகைப்படுத்தப்பட்ட எண்ணிக்கை. போராட்டத்தின்போது 13 அப்பாவிகளான சிவிலியன்களே கொல்லப்பட்டுள்ளார்கள். மிகைப்படுத்தப்பட்ட வதந்திகள் அயல் மாகாணங்களுக்கும் பரப்பப்பட்டுள்ளது. இது ஒரு விஷமப் பிரசாரம்,'' - என்றும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சீனாவால் மேற்கொள்ளப்பட்ட பலவந்த ஒடுக்குமுறை தொடர்பாக, சர்வதேச மட்டத்திலான விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமென தலாய்லாமா அறை கூவலொன்றையும் விடுத்துள்ளார்.

பீஜிங்கில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் திபெத்திய பிராந்திய ஆளுநர் குயாங்பா பேசுகையில், ''பாதுகாப்புப் படைகள் எத்தகைய ஆயுதங்களையோ பலவந்த நடவடிக்கைகளையோ மேற்கொள்ளவில்லை. ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற தோரணையில் நான் சொல்கின்றேன். துப்பாக்கிகள் வேட்டுக்களைத் தீர்க்கவேயில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ப்பரித்த கூட்டத்தினரே 13 பேரைக் கொன்றுள்ளனர். பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 61 பேரைக் காயப்படுத்தியுள்ளனர். 300 இற்கு மேற்பட்ட பகுதிகளில் தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 214 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தலாய் லாமா குழுவினரே இந்த வன்முறைகளை நடத்தியுள்ளனர் என்றும் விவரித்துள்ளார்.

## ஏவுகணைத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் 20 பேர் பலி

இஸ்லாமாபாத், மார்ச்18

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டி அமைந்துள்ள பாகிஸ்தான் கிராமத்தில் நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல்கள் நடைபெற்றன. அதில் வெளிநாட்டினர் உட்பட 20 பேர் பலியாகினர். தாக்குதலை நடத்தியது யார் என்பதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள தெற்கு வஜிரிஸ்தான் என்ற மாவட்டத்தில் தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதால் இராணுவத்துக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே அடிக்கடி சண்டை நடப்பது வழக்கம்.

இந்த நிலையில், ஷாநவாஸ் கோட் கிராமத்தில் உள்ள ஒரு குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் சரமாரியாக ஏவுகணைகள் வந்து விழுந்தன. மொத்தம் ஏழு ஏவுகணைகள் விழுந்து வெடித்ததில் அங்கிருந்த வீடுகள் இடிந்து விழுந்தன. இந்தத் தாக்குதலில் 20 பேர் பலியாகி விட்டனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

உயிரிழந்தவர்களில் சிலர் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள். இடிபாடுகளில் சிக்கி இருக்கும் உடல்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆப்கானிஸ்தான் நாட்டில் இருந்து அல்லது ஆளில்லா விமானம் மூலமாக ஏவுகணைகள் வீசப்பட்டு இருக்கலாம் என்று உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். இத்தாக்குதல் அமெரிக்கப் படையினரால் தீவிரவாதிகளை இலக்குவைத்து நடத்தப்பட்டதா என்ற சந்தேகமும் நிலவிவருகின்றது.

## விமானம் விபத்துக்குள்ளானதில் நைஜீரியாவில் மூவர் உயிரிழப்பு

நைஜீரியாவில் தனியாருக்குச் சொந்தமான சிறியரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி விழுந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த 3 பேர் உயரிழந்தனர். விமானம் விழுந்த இடத்திற்கு சென்ற மீட்புக் குழுவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்த விமானத்தை கடந்த இரண்டு தினங்களாக காணவில்லை என்றும், விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என்றும் கூறியுள்ள நைஜீரிய விமான போக்குவரத்து ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர், இந்த விபத்தில் விமானக் குழுவினர் இரண்டு பேரும் தொழிலதிபர் ஒருவரும் உயிரிழந்திருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.நைஜீரியாவில் 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டில் நடந்த நான்கு விமான விபத்துக்களில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

## கறுப்பு நிற ஆண்களைத்தான் பெண்களுக்கு அதிகம் பிடிக்கும்

லண்டன், மார்ச் 18

கறுப்பாக இருக்கும் ஆண்களைத்தான் பெண்களுக்கு அதிகம் பிடிக்கும் என்று லண்டனில் நடந்த ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.'கறுப்பாக இருக்கும் ஆணுக்கு மனைவி சிவப்பாக இருப்பாள். அந்த ஜோடியைப் பார்த்துப் பலரும் பொறாமைப்படுவார்கள்.' - என்கின்றது அந்த லண்டன் ஆய்வு.

இதுகுறித்து லண்டனைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அந்த ஆய்வில் பெரும்பாலான பெண்கள் கறுப்பு நிற ஆண்களையே விரும்புகின்றனர் எனத் தெரியவந்தது. கறுப்புநிற ஆண்கள் என்றாலே ஆண்மை, வீரம், பாலியல் வீரியம் அதிகமானவர்கள் என்று பெண்கள் கருதுகின்றனர். இதனால்தான் கறுப்பு ஆண்களைப் பெண்கள் விரும்பித் திருமணம் செய்கின்றனர் என ஆராய்ச்சி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மூத்த அண்ணாவியார் மார்க்கண்டு காலமானார்

அச்சுவேலி,மார்ச்.18

அச்சுவேலியைச் சேர்ந்த அண்ணாவியார் இ.மார்க்கண்டு கொழும்பில் நேற்று முன்தினம் 90ஆவது வயதில் காலமானார்.

பழம் பெரும் மேடைநாடக நடிகரும் அண்ணாவியுமான மார்க்கண்டு, நடிகமணி வி.வி.வைரமுத்து, செல்வரத்தினம் போன்ற மேடைநாடக கலைஞர்களுடன் இணைந்து அரிச்சந்திரன், சத்தியவான் சாவித்திரி, சிவ தொண்டன் போன்ற நாடகங்களில் தனித்துவமான பாத்திரங்களை ஏற்று நடித்தவர்.

அச்சுவேலியில் ''ஸ்ரீ இராமாணந்தா நாடக சபா'' என்ற அமைப்பை நிறுவி அதனூடாக புராண நாடகங்கள் பலவற்றை மேடையேற்றியதுடன், இளைய தலைமுறையினரில் மேடை நாடகப் பரம்பரை ஒன்றை உருவாக்கியவர். (அ-11)

## முன்னாள் இராணுவப் பேச்சாளர் ஜெனரல் முனசிங்க காலமானார்

கொழும்பு, மார்ச் 18

ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னாள் பேச்சாளரும், மூத்த தனபதிகளில் ஒருவரும், முன்னாள் பிரதி சபாநாயகரும், ஐ.தே. கட்சியின் பொல்காவலைத் தொகுதி அமைப்பாளருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க (வயது - 59) கொழும்பில் நேற்றுக்காலை காலமானார்.

கடந்த சில வாரங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர், கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் காலமானார்.

குருநாகலைச் சேர்ந்த சரத் முனசிங்க, குருநாகல் மாளியதேவா கல்லூரி பழைய மாணவராவார்.

## 20 வருடங்களில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வங்காள விரிகுடாவில் வீசும் காற்று அதிகளவு ஈரலிப்பைக் கொண்டுள்ளமையால் மழை மேகங்கள் உருவாகி மார்ச் மாத மழை பெய்ததாக அவதான நிலையம் மேலும் தெரிவித்தது.

இன்னும் இரண்டு அல்லது மூன்று தினங்கள் இந்த மழை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நாளாந்தம் மழை பெய்வதால் பல பகுதிகளில் உள்ள குளங்கள் நிரம்பி வழிவதாகவும் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்கள் மற்றும் காய்கறித்தோட்ட நிலங்களில் மழை நீர் தேங்கியுள்ளதாகவும் எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல பகுதிகளில் மழை காலம் போன்று கிணறுகள் நிரம்பி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மழை வெள்ளம் தேங்கி பல ஒழுங்கைகள், வீதிகளில் போக்குவரத்து இடைஞ்சல் ஏற்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (அ-50)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் இந்த விடயத்தை உயர் நீதிமன்றம் பரிசீலித்தது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, சலீம் மர்சூக், அன்ட்ரூ சோமவன்ஸ, ஜகத் பாலபட்ட பெந்தி ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த விவகாரத்தை ஆராய்ந்தது.

அரசுத் தரப்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் ஸி. ஏ. இரட்ணாயக்கா ஆஜராகிக் கருத்துத் தெரிவித்தார்.

மாற்றுக் கொள்கைகள் மையத்தைச் சேர்ந்த றொஹான் எதிரிசிங்கவின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகிக் கருத்தைத் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றம் தனது ஆலோசனையை ஜனாதிபதிக்கு அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

Softview Computer College
55, Arasady Rd, Jaffna.
வார மற்றும் வார இறுதி நாட்களுக்கான புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்
Microsoft Office
Internet E-mail
Desktop Publishing
Hardware Engineering
ICT, GIT, Kids Program
Computer Typing(Tamil&English)
பதிவுக்கான இறுதித் திகதி 22.03.2008
- வரையறையற்ற செய்முறைப் பயிற்சி
- ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- தனிப்பட்ட வகுப்புக்களுக்கான அனுமதி
- மாதாந்த தவணைக் கட்டணம்
- ஒவ்வொரு பாடமுடிவிலும் பரீட்சைகள்

# தமிழ் வர்த்தகர், 13 ஊழியர்கள் ஞாயிறன்று கொழும்பில் கைது

கொழும்பு, மார்ச் 18

தெஹிவளையை வசிப்பிடமாகக் கொண்டவரும் கிருலப்பனையில் வெல்டிங் நிலையம் ஒன்றை நடத்துபவருமான வர்த்தகர் ஒருவரையும், அவரது ஊழியர்கள் 13 பேரையும் மற்றும் உறவினர் ஒருவரையும் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் கைது செய்தனர் என்றும், தமது கணவரை எங்கே வைத்துள்ளனர் என்பது தமக்குத் தெரியவில்லை எனவும் மேற்படி வர்த்தகரின் மனைவி பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை கொட்டாஞ்சேனை பொலிஸார் என்று கூறியவர்களால் தனது கணவரான கார்த்திகேசு சிவாஜியை அவரது மகேந்திரா ஜீப்புடன் அழைத்துச் சென்றனர் எனவும், தெஹிவளையில் உள்ள தமது வீட்டைக் கடுமையாகச் சோதனை செய்தனர் எனவும் தற்போது ஜீப்பும், 14 பேரும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தமது கணவர் அங்கில்லை எனவும் தேவரஞ்சனி சிவாஜி பிரதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

ஞாயிறு இரவு தன்னையும் தனது மகனையும் அழைத்துச்சென்ற பொலிஸார் துறைமுகப் பொலிஸுக்கு அழைத்துச் சென்று கண்களைக் கட்டி விசாரித்ததுடன் தனது கணவரை கூட்டி வருவர் எனக் கூறி வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டு கணவரை காட்டாமல் இரவு 12 மணியளவில் வீட்டில் இறக்கிவிட்டனர் எனவும் தேவரஞ்சனி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான ஆர். ஜி. வித்தன், என்.தர்ஷன், இ. சந்திரகுமார், அலெக்ஸாண்டர், சுஜந்தன், ஜெரிட்டாஸ், சதீஸ்கரன், துஷ்யந்தன், மயூரன், ஜெயந்தன், புஸ்பராஜ், சிவகுமார், நிசான் அல்பிரட்ட்ருமன் ஆகியோரே கொட்டாஞ்சேனையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (சி)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்துத் தெரியவரவில்லை.

இதற்கிடையில், மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக மன்னார் அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இதுவரை சுமார் ஐந்நூறு குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

அத்துடன் மன்னார், முருங்கன் பகுதியில் நேற்றுமுன்தினம் வீழ்ந்த இடியினால் தொலைக்காட்சி மற்றும் கணினி உட்பட மக்களின் பாவனைப் பொருள்கள் பல பழுதடைந்திருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மைக் கைது செய்தமை, தடுத்து வைத்திருக்கின்றமை ஆகியன சட்டவிரோதமானவை என இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள திசநாயகம், தாம் மனிதாபிமானமற்ற முறையிலும் கொடூரமான வகையிலும் நடத்தப்பட்டார் எனவும், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார் எனவும் அதில் தெரிவித்துள்ளார்.

காரணம் காட்டப்படாமலேயே தாம் கைது செய்யப்பட்டார் என்றும் -

லண்டனில் உள்ள அரச சார்பற்ற தொண்டு நிறுவனம் ஊடாகத் தமது இணையத்தளத்துக்கு வழங்கப்பட்ட நிதியிலேயே தமது இணையத்தளம் இயங்குகின்றது என்றும் - தமது மனுவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சி)

## ரூபவாஹினியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள், வன்முறைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நேற்றுவரை காலக்கெடு விதித்திருந்த இலங்கைக் கூட்டுத் தொழிற்சங்கங்கள், தமது விடயம் குறித்து உரிய கவனிப்பு மேற்கொள்ளப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கப் போகின்றன என்றும் எச்சரித்திருந்தன.

இந்த நிலையிலேயே - நேற்று அந்தக் காலக்கெடு முடிவடைய முன்னர் - கூட்டுத்தாபனத்தை முழுப் பாதுகாப்புக் கெடுபிடிக்குள் கொண்டு வந்திருக்கின்றது அரசு.

அரசுக்கு ஆதரவான சிலரை மட்டும் உள்ளே அனுமதித்து அவர்கள் மூலம் ஒளிபரப்பை அதிகாரிகள் நேற்றுத் தொடர்ந்தனர்.

நேற்றுப் பணிக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட ஊழியர்கள் நேற்றுக் காலை 10 மணியளவில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு அருகில் - சுதந்திர சதுக்கப் பகுதியில் - ஒன்று கூடினர்.

இதையடுத்து அவர்களுக்கு அருகில் படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். விசேட கலகம் அடக்கும் படையும் தருவிக்கப்பட்டது. கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் கொண்டுவரப்பட்டன. தண்ணீரைப் பீய்ச்சி அடிக்கும் வாகனமும் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது.

எனினும் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்பட முன்னர் ஊழியர்கள் மெதுவாகக் கலைந்து சென்றனர். (சி)

NCA வெளியிடு இணுவில்
தரம் 05
புலமைப்பரிசில் பரீட்சை 2008
பரீட்சை ஆரம்பம் 30.03.08 ஞாயிறு 9 மணி
விண்ணப்ப முடிவு திகதி 23.03.08
* வினாத்தாள்கள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.
NCA கல்வி நிலையம் இணுவில்.
077..8459, 0776241573

## நாட்டிலுள்ள...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மாகாண சபைத் தேர்தல் இன்றைய தேவை

இன்றைய கிழக்கு மக்கள் பிரிவினைவாதத்தை வெறுப்பவர்களாகவும் ஜனநாயகத்தை மதிப்பவர்களாகவும் அல்லது ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்பவர்களாகவும் இருக்கின்றனர். இப்படியான சந்தர்ப்பத்தில் அம்மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் அரசு மிகக் கவனமாக இருக்கின்றது. அதற்காக கிழக்கு மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தல் ஒன்று இன்றைய தேவையாகவும் இருக்கின்றது.

நாடு முழுவதுமான 14,000 கிராம எழுச்சித் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். அந்த வகையில் 2008ஆம் ஆண்டு நிறைவடைவதற்குள் நாட்டின் 25 மாவட்டங்களிலும் சிங்கக்கொடி ஏற்றப்பட்டு சகல இன மக்களும் பேதங்களை மறந்து சம உரிமையுடன் வாழக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுவிடும் - என்றார்.

இவ்வைபவத்தில் இராணுவ சேவையின்போது கால்களை இழந்த வீரர்களுக்கு சக்கர நாற்காலிகளையும் மற்றும் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களையும் பஸில் ராஜபக்ஷ எம்.பி. வழங்கினார். (அ)

## பிள்ளையான் குழு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டோம் என்று கூறி கிழக்கை மட்டக்களப்புப் புலிகளான பிள்ளையான் குழுவிடம் அரசு ஒப்படைத்திருக்கின்றது.

### பிள்ளையான் குழுவுடன் சேர்ந்து இயங்குவதால் அவப் பெயர்

இந்தப் பிள்ளையான் குழு என்பது எது? இக்குழுவினர் ஒரு காலத்தில் எமது படையினருக்கும் எமது நாட்டுக்கும் எதிராக யுத்தம் புரிந்தவர்கள், பாரிய சேதங்களை ஒட்டுமொத்த தேசத்திற்கும் ஏற்படுத்திய வர்கள்.

அப்படியான ஒரு குழுவினருடன் அரசு சேர்ந்து இயங்குவதன் காரணத்தால் சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா இதுநாளவரை இலங்கைக்கு வழங்கிவந்த இராணுவ மற்றும் நிதி உதவிகளை நிறுத்திவிட்டது.

2001ஆம் ஆண்டுவரை அமெரிக்காவின் உதவிகள் அந்நாட்டால் நிறுத்தப்பட்டிருந்தன. 2002இல் நாம் ஆட்சிக்கு வந்துதான் அத்தடையை நீக்கினோம்.

2002இல் யுத்தத்தை நிறுத்தி அமைதி முயற்சிகளை நாம் முன்னெடுத்துச் சென்றதன் காரணமாகவே இத்தடை நீக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இராணுவத் தளபாடங்களும் நிதியும் இலங்கைக்கு அமெரிக்காவால் வழங்கப்பட்டன.

இராணுவப் பயிற்சியும் அமெரிக்காவால் இலங்கைப் படையினருக்கு வழங்கப்பட்டது. ஆனால் இப்போது அவை அனைத்தும் நிறுத்தப்பட்டுவிட்டன.

மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பிள்ளையான் குழுவுடன் அரசு ஒப்பந்தம் செய்துகொண்டு செயற்படுவதன் காரணமாகவே இவ்வுதவிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. (அ-சி)

## மழைக்கு மத்தியிலும் மட்டுவிலில் கூடியது பெரும் பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்18

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய முதலாவது பங்குனித் திங்கள் உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நேற்றுக் கூடினர்.

முந்திய வருடங்களைப் போல் போக்குவரத்து வசதிகள் போதிய அளவில் செய்யப்படாத போதிலும், வழமைபோன்று பாதுகாப்பு இறுக்கமாக இருந்த போதிலும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்துக்கு வந்திருந்தனர்.

இடை இடையே மழை பெய்ததால் பக்தர்கள் பொங்கல் செய்வதில் பெரும் சிரமங்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. (அ-1)

## கோதுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு விநியோகிக்கும்படி ப.நோ.கூ.சங்கங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தனியார் கடைகளில் - வெளிச்சந்தையில் - ஒரு கிலோ கோதுமை மா 90 ரூபாவில் இருந்து 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## கிழக்கிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் மழையால் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழையால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளதால் மக்கள் இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

மண்முனை வடக்கு பிரதேசத்தில் 1894 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன என்று மேலதிக அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சின்ன ஊறணியில் 263 குடும்பங்களும் மஞ்சத்தொடுவாயில் 456 குடும்பங்களும நாவற்கேணியில் 426 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன என்றும் அவர் சொன்னார்.

இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகமாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டு, உணவு வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

மழை தொடர்ந்து பெய்தால் மேலும் ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர நேரிடலாம் என்றும் அவர் அச்சம் வெளியிட்டார்.

மட்டக்களப்பில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு முடிவடைந்த 24 மணி நேரத்தில் 46.6 மி.மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக காலநிலை அவதான நிலைய அதிகாரி தெரிவித்தார்.

### அம்பாறை

அம்பாறையில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நித்தவூர், சாய்ந்தமருது, கல்முனை, அட்டாளைச்சேனை, திருக்கோயில், பொத்துவில், அக்கரைப்பற்று ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அப்பகுதிகளில இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

கல்முனை கல்வி வலயத்தில்சாஹிராக் கல்லூரி உட்பட பல பாடசாலைகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் நேற்று கல்வி நடவடிக்கைகள் செயலிழந்தன.

நிந்தவூர் மத்திய வடிகால்வாய் உடைப்பெருத்ததால், நெல்வயல்கள் வெள்ளத்தில் முழ்கியுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளையும், நிவாரணங்களையும் வழங்குமாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் அரச அதிபரைக் கோரியுள்ளார்.

### திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் தொடரும் மழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளநிலை ஏற்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளனார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கேகாலை, கம்பஹா, குருநாகல், அம்பாந்தோட்டை, அநுராதபுரம், மொனறாகல, இரத்தினபுரி, பதுளை ஆகிய மாவட்டங்களிலும் கனத்த மழை பெய்ததாக வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கேகாலை மாவட்டத்தில் ஆகக் கூடுதலாக 132 மி.மீ மழை பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.